உ

# வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.

பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

**Vol. 2 — April 1940. — No. 5**

## விஷய சூசிகை


ஆஸவாரிஷ்டங்களும் சென்னை அரசாங்கமும்
பத்திராதிபர் 1

சுதேச வைத்யமும் அதன்விரிவும்
மதுரை டாக்டர் S. வன்னியக்கோனர் அவர்கள் 1-11

சுதேச வைத்யமும் விதேச வைத்யமும்
பண்டிட் நாராயணய்யங்கார் அவர்கள் 11-15

சர்மரோகங்களும் அதன் பரிகாரங்களும்
கரூர், பண்டிட், P. S. ராமசர்மா அவர்கள் 16—20

ஸஹஸ்ரயோகம்
கரூர், பண்டிட், P. S. ராமசர்மா அவர்கள் 208-219


OFFICE OF THE REGISTRAR ... 7-MAY 1940 MADRAS


**சந்தா விகிதம்.**

வருஷ சந்தா:—
உள் நாட்டுக்கு ரூ. 2
வெளிநாட்டுக்கு ரூ. 3

**விளம்பர விகிதம்.**

மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8
,, ,, ½-க்கு ரூ 4
,, ,, ¼-க்கு ரூ 2

கிடைக்குமிடம்:—
**Pandit, S. NARAYANA IYENGAR.**
**Editor and Publisher.**
No. 2, Police Station West Lane, Madura.

வெங்கடேஸ்வர் பிரஸ், மதுரை:—40.

[விலை 0—3—0

# வைத்திய சந்திரிகா.

---

ஆயுர்வேத சாஸ்திரத்தின் உண்மைப் பெருமையையும் அதன் ஆராய்ச்சியினால் மனிதசமூகத்திற்கு ஏற்படக்கூடிய பிரயோஜனத்தையும் தெளிவாக எடுத்து விளக்குவதற்கே நமது **மாஸிகை** வெளிவருகிறது. ஆயுர்வேத சாஸ்திரத்தில் பூர்ணபாண்டித்தியம் வாய்ந்த எமது ஆசிரியரும், மற்றும் பழைய முறையில் பயிற்சியுடையவர்களும் எழுதிவரும் விஷயங்கள் பண்டிதருக்கும், பாமரருக்கும் நல் விருந்தாக அமையும்.

வைத்திய சாஸ்திரத்தில் முக்கியமான பல புஸ்தகங்களின் மொழி பெயர்ப்பு நல்ல நடையில் வெளிவரும். வியாதிகளின் காரணம், குணம், சிகித்சை முதலியவைகளை மூடுமந்திரமில்லாமல் "**வைத்திய சந்திரிகா**" பிரதிமாதமும் தாங்கிவருவாள். ஒரு வைத்திய கலாசாலையைப்போல் நமது "**சந்திரிகா**" உதவுவாள்.

சந்திரிகையின் ஒவ்வொரு சஞ்சிகையிலும் கடைசி பாகத்தில் **வைத்தியசாரம்** என்றும் **ஔஷதசாரம்**என்றும் **ஸஹஸ்ரயோகம்** என்றும் மூன்று தனிப்புஸ்தகங்கள் தொடர்ச்சியாக வெளிவரும். ஒவ்வொரு வியாதியின் லக்ஷணம்,காரணம்,அவற்றின் சிகித்சை முதலியன விரிவாக **வைத்திய சாரத்தில்** எழுதப்படும். சரகம், சுசுருதம், அஷ்டாங்கஹிருதயம், அஷ்டாங்கசங்கிரஹம், பாவப்பிரகாசம், சார்ங்கதரம் பதினெண் சித்தர்கள், இருபத்தேழு சித்தர்கள் முதலியவைகளிலிருந்து பலதடவை அனுபவத்தில் குணம் கண்டறிந்த பஸ்மம், சிந்தூரம், லேகியம், கஷாயம் முதலியன **ஔஷதசாரத்தில்** தெளிவாக செய்முறையுடன் சொல்லப்படும். மலையாள தேசத்திற் பிரசித்தமான **ஸஹஸ்ர யோகமென்ற** நூல் தமிழில் மொழிபெயர்த்து விரிவான செய்முறைகளுடனும் உபயோகிக்கும் விதங்களுடனும் வெளியிடப்படும். சுதேச முறைகளை நன்கு தெரிந்து கொள்ளவிரும்புபவர்களுக்கு இது ஓர் இன்றியமையாத சாதனமாகும்.

**மானேஜர்,**

**"வைத்திய சந்திரிகா" மதுரை**

ஆஸவாரிஷ்டங்களும் சென்னை அரசாங்கமும்.

ஆஸவாரிஷ்டங்களைத் தயாரிப்பவர்கள் லைசென்ஸ் பெறவேண்டுமென்றும், அவைகளை ஓர் அளவுக்குட்பட்டே தயாரிக்கவேண்டுமென்றும், அவைகளைத் தயாரிப்பவர்கள் கணக்கு வைத்துக்கொள்ளவேண்டுமென்றும் சென்னை அரசாங்கத்தார் ஓர் அறிக்கை விடுத்திருப்பதாக அறிகிறோம். இவ்வறிக்கை அனுஷ்டானத்திற்கு வந்தால் பலவிதத்திலும் சுதேச வைத்தியர்களுக்குத் தொந்திரவு விளையுமென்பது திண்ணம். ஆஸவாரிஷ்டங்களைச் சாராய வகையில் சேர்த்து சாராயங்களுக்குப்போல இதற்கும் லைசென்ஸ் பெறவேண்டுமென்று அரசாங்கத்தார் நினைப்பது சற்றும் நியாயமில்லை. சாராய வகைகளால் பொதுஜனங்களுக்குப்பல கெடுதிகள் விளைவதையாரும் ஆக்ஷேபிக்கவில்லை. ஆனால் ஆஸவாரிஷ்டங்களை உபயோகிப்பதால் யாதாமொரு கெடுதி பொது ஜனங்களுக்கு விளைந்ததாக நிரூபிக்க முடியாது. ஆஸவாரிஷ்டங்களை அளவுக்கு மீறி உபயோகித்து புத்திகெட்டு அனர்த்தம் விளைந்ததாக நாளதுவரை யாரும் கண்டதுமில்லை. நியாயஸ்தலங்களிலும் இதுவரை ஒரு வியவஹாரமும் நடைபெற்றதில்லை. ஆகவே இவைகளில் சற்று அல்கோஹால் இருப்பதை மாத்திரம் நினைத்து இவைகளையும் சாராய வகைகளில் சேர்த்து நிர்பந்தம் செய்வது உசிதமில்லை. சுதேச வைத்தியர்களின் மருந்து வகைகளில் ஆஸவாரிஷ்டங்களே முதன்மை பெற்றிருக்கின்றன, பிரதிதினம் இவைகளைக்கொண்டே பொது ஜனங்களுக்குப் பெரும்பான்மையான சிகித்சை நடைபெற்று வருகிறது. இவைகளுக்கு கணக்கு வைத்துக்கொள்வதும் சாத்தியமில்லை. ஆகவே ஆஸவாரிஷ்டங்களை சுதேச வைத்தியர்கள் முற்றிலும் கைவிட நேரிடும். சென்னை அரசாங்கத்தாரின் இந்த விபரீதச் செய்கையானது சுதேச வைத்தியத்தையே நிர்மூலமாக்குவதற்கு ஹேதுவாகுமெனப் பொதுஜனங்கள் நினைக்க நேரிடும். ஆகையால் அரசாங்கத்தார் தங்கள் அபிப்பிராயத்தைப் புனராலோசனை செய்து ஆஸவாரிஷ்டங்களில் நிர்பந்தம் விதிக்காமலிருக்கும்படி வேண்டுகிறோம்.

மார்ச்சு மீ 12உயில் சென்னையில் ஆந்திர வைத்தியமண்டலத்தார் Dr. A. லக்ஷ்மீபதிஅவர்கள் தலைமையில் அரசாங்கத்தின் இச்செய்கையைக் கண்டித்துத் தீர்மானம் செய்ததுபோல திராவிடநாட்

டிலும் பல விடங்களிலும் சுதேசவைத்தியர்கள் கூட்டம் கூடி பல மாக ஆக்ஷேபிக்கவேண்டியது மிகவும் அவசியமென நினைக்கிறோம்.

---

## சுதேச வைத்தியமும் அதன் விரிவும்.

(மதுரை டாக்டர் S. வன்னியக்கோனார் அவர்கள் எழுதியது.)

ஆதியில் சிவ பெருமான் தம்மால் சிருஷ்டிக்கப்பட்ட ஜீவராசிகளிடத்தில் வைத்த பெருங்கருணையால் அவைகளுக்கு நேரிடும் பலவித பிணிகளை விலக்கும் நோக்கத்துடன் அருளிச்செய்த நான்கு வேதங்களின் அர்த்தவேதம், ஆயுர்வேதம், காந்தர்வவேதம், தனுர்வேதம் என்ற உபாங்கங்களுள் ஒன்றாயும், ஹேது, லிங்கம், ஔஷதம் என்ற முப்பொருளை விவரிக்கும் மூன்று ஸ்கந்தங்களுடன் கூடியதுமான ஆயுர்வேதத்தை ஆதிகாலத்தில் நான்முகன் தக்ஷப்பிரஜாபதிக்கும், அவர் அசுவனிதேவர்களுக்கும், அவர்கள் இந்திரனுக்கும் அவன் ஆத்ரேயர் முதலிய மகரிஷிகளுக்கும் உபதேசித்து உலகில் பரவிற்று என்றும், பார்வதிதேவியார் நந்திக்கும், அன்னார் எம்பெருமானுக்கும், அவர் தேவர்கள், முனிவர், சித்தர், முதலியோருக்கும் உபதேசித்து உலகில் பரவிற்று என்றும், பிரம்மனால் உபதேசிக்கப்பெற்ற தக்ஷர் சிகித்ஸாதர்சனம் என்ற நூலை இயற்றி அசுவனிகளுக்கு உபதேசிக்க அவர்கள் சிகித்ஸாரத்னம், பிரம்மபக்யம் என்ற நூல்களை வெளியிட்டு தேவவைத்யர்களானார்களென்றும், ஒருக்கால் பக்ஷவாதநோயுற்ற இந்திரனுக்குச் சிகித்சை செய்து குணப்படுத்த அவ்வாச்சரியத்தைக்கண்டு மகிழ்ந்த இந்திரன் அக்கலையை அவர்களிடம் அப்பியசித்தானென்றும், பிரளயகாலத்தில் சாஸ்திரங்கள் மறைந்த காலத்தில் அவை ஆதிசேஷனால் கண்டுபிடிக்கப்பட்டதென்றும், பாற்கடல் கடைந்து அமிர்தம் கண்டுபிடிக்கப்பட்டபொழுது அமிருதகலசத்துடன் தன்வந்தரி பகவான் அவதரித்து இந்திரனிடத்தில் ஆயுர்வேதம் கற்று பூலோகத்தில் பிணிவாய்ப்பட்டுக் கதறும் ஜீவராசிகளின் துயரத்தை நீக்கக்கருத்துகொண்டு காசிராஜனாக அவதரித்து ஔபதேனவர், வைதரணர், ஔரப்ரர், பௌஷ்கலாவதர், கரவீர்யர், கோபுரர், ரக்ஷிதர், சுசுருதர், நிமி, காங்காயனர், கார்க்யர், காலவர் என்ற 12 சிஷ்யர்களுக்கு உபதேசித்து ஆயுர்வேதத்தை உலகில் விஸ்தரிப்பித்தார் என்றும் இப்படிப் பலவிதமாக ஆயுர்வேத வரலாற்றை நூல்கள் கூறுகின்றன.

இவ்வாறு ஆயுர்வேத உபதேசம் பெற்றவர்களையும் அவரவர் சீடர்களையும் வடமொழி தென்மொழிகளில் அவர்கள் இயற்றியுள்ள நூல்களையும் தனித்தனி விவரிக்கப்புகின் பெருகுமாதலால் இங்கு அவசியம் வேண்டியவற்றை மாத்திரம் சுருக்கமாகச் சொல்லுகிறேன். தந்வந்தரிபகவான், அசுவனிதேவர், இந்திரன், அகஸ்தியர், புலத்தியர், ஜனகர், அக்னிவேசர், பேளர், சௌமியர், மாண்டுகர்ணர், பராசரர், ஹாரீதர், ஆத்ரேயர், கௌதமர், காச்யபர், கார்க்யர், பரத்துவாஜர், சுசுருதர், மனு, சுவாயம்புமனு, பாக்யவர்க்கர், விசுவாமித்திரர், அத்திரி, காத்யாயனர், வசிஷ்டர், வியாஸர், பார்க்கவர், கண்வர், போதாயனர், தக்ஷர், சங்கர், கபிலர், ஆபஸ்தம்பர், போஜர், கராநாதர், சுகர், வாமதேவர், சாதாதபர், ஆங்கிரஸர், ஸம்வர்த்தர், விஷ்ணு, கோநஸர், சுமந்து, சூரியர், அருணர், நாராயணர், ஹரிச்சந்திரர், பத்திரவர்மர். சௌனகர், யோகாநந்தர், நவநாதர், ஆதிநாதர், வியாக்கிரபாதர், சரகர், ஸ்ரீகண்டர், வாக்படர், க்ஷாரபாணி ஆகிய இவர்கள் வடமொழியில் பல ஆயுர்வேத நூல்களை இயற்றியுள்ளார்கள். நந்தீசுவரர், ஸ்கந்தர், அகத்தியர், புலத்தியர், திருமூலர், தேரையர், காலாங்கிநாதர், போகர், கொங்கணர், புலிப்பாணி, சட்டமுனி, தக்ஷிணாமூர்த்தி, வாமதேவர், மச்சமுனி, கமலமுனி, ரோமரிஷி, கருவூரார், கோரக்கர், சுந்தரானந்தர், இடைக்காட்டார், பாம்பாட்டிச்சித்தர், யூகிமுனி, சிவவாக்யர், திருவள்ளுவர், கடைப்பிள்ளை, வில்லிசித்தர், காகப்புசுண்டர், கௌபாலசித்தர், குதம்பைசித்தர், அம்பிகானந்தர், பிடிநாக்குசித்தர், டமாரநந்தர், அழுகண்ணிச்சித்தர், கடுவெளிச்சித்தர், சங்கிலிசித்தர். திரிகோணசித்தர், விளையாட்டுச்சித்தர், பிரம்மமுனி, சங்கமுனி, ஜயமுனி, கன்ருளிசித்தர், கஞ்சமலைச்சித்தர், ஆகிய இவர்கள் ஆயுர்வேத முறைகளைத்தென்மொழிகளில் விளக்கியுள்ளார்கள், இவர்களுள் அகஸ்தியர் தென்மொழியில் செய்தருளிய தொகை நூல்களில் வாத சாஸ்திரம் ஒரு லக்ஷம், வைத்ய சாஸ்திரம் இரண்டு லக்ஷம், மற்றைய சித்தர்கள் வைத்யத்துடன் பல விஷயங்களையும் சேர்த்துச்சொல்லிய சாஸ்திரம் ஒரு லக்ஷம் ஆக மொத்தம் நான்குலக்ஷமெனவும், வடமொழியில் மொத்தம் எட்டு லக்ஷங்களாயிருந்த வைத்ய சாஸ்திரத்தைச்சில பெரியோர்கள் நான்குலக்ஷ கிரந்தங்களாகச்சுருக்கி அவைகளை மனிதர்கள், தாவரம், மிருகம், வைத்யாங்கமென நான்கு பிரிவுகளாகப்பிரித்திருக்கின்றனர் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

(32 எழுத்துக்களடங்கிய ஓர் வாக்யத்திற்கு கிரந்தமெனப்பெயர் இடப்பட்டிருக்கின்றது. பத்திராதிபர்.)

தென்மொழியிலுள்ள நான்குலக்ஷ கிரந்தங்களின் விவரம்— சரீரநிதானம், சாமுத்ரிகம், தேகபேதம், அஷ்டபரீக்ஷை, நாடிலக்ஷணம், தோஷபேதம், சப்ததாதுக்களின் விவரம், அரிஷ்டம் இவைகளைக்குறித்து 20000 கிரந்தங்களும், வாதாதிரோகம், துவந்த்வரோகம், சைத்யரோகம், கிரகரோகம், விரணரோகம், கிருத்திரிமவிஷம், தாவரவிஷம், சர்ப்பவிஷம், கீடவிஷம் முதலியவைகளைக் குறித்து 30000 கிரந்தங்களும் இவற்றின் சிகித்சைகளைக்குறித்து 60000 கிரந்தங்களும், நிலவர்க்கம், நீர்வர்க்கம், விருக்ஷவர்க்கம், செடிவர்க்கம், புல்வர்க்கம், பயிர்வர்க்கம், முதலியவைகளுக்குக் காணும் ரோகங்களைக்குறித்து 20000 கிரந்தங்களும், அவற்றின் சிகித்சைகளைப்பற்றி 70000 கிரந்தங்களும் கஜவர்க்கம், அசுவவர்க்கம் ரிடபவர்க்கம், மேடவர்க்கம், முதலியவைகளுக்குக் காணும் ரோகங்களைக்குறித்து 30000 கிரந்தங்களும் இவற்றின் சிகித்சைகளைக் குறித்து 50000 கிரந்தங்களும் பாகசாலை, பாஷாணம், கல்வம், முதயதுணைக்கருவிகள், கல்பம், (காயசித்தி) யோகம், ஞானம், வாதம், குளிகை, கைபாகம், செய்பாகம், தீக்ஷை, சகுன ஆரூட தூதலக்ஷணம், பூஜை, மந்திரம், யந்திரம், அஷ்டகருமம், அஞ்சனம், ஜாலம், கரு, மறைப்பு, முதலியவைகளைக்குறித்து 120000 கிரந்தங்களும் ஆக இவ்விதம் மொத்தம் நான்கு லக்ஷக்கிரந்தங்களென கூறப்படுகின்றது. இவற்றுள் மனிதர்களின் ரோகங்களையும் அவைகளின் சிகித்சையையும் கூறும் கிரந்தங்களை மாத்திரம் தனித்து எடுத்துச் சுருக்கி பதினாயிரம் கிரந்தமாகச் சரகமுனிவர் தமது பெயரால் சரக ஸம்ஹிதை என்ற ஒரு சாஸ்திரத்தைச் செய்தருளினார். இதுவே பூர்வீக ஆயுர்வேத கிரந்தமாகும். இது 8 பிரிவுகளாக வகுக்கப்பட்டிருக்கின்றது. (1) சல்லியம் (சஸ்திர சிகித்சை) (2) ஊர்த்துவாங்க சிகித்சை (இதுவே சாலாக்யமெனப்படும்.) கழுத்துக்குமேலிருக்கும் உறுப்புகளில் காணும் ரோகங்களையும் அதன் சிகித்சைகளையும் இது விவரிக்கும். (3) காயசிகித்சை (இது சுரம், ஸந்நிபாதம், அதிசாரம், போன்ற பல வியாதிகளையும் அதன் பரிஹாரங்களையும் கூறும்). (4) பூதசிகித்சை (இது பேய், பிசாசு, முதலியவைகளால் காணும் மனோவியாதிகளையும் அதன் பரிகாரங்களையும் கூறும்) (5)

(7) வாஜீகரண தந்திரம்=இது ஜனனேந்திரியங்களி லுண்டாகும் வியாதிகளை விலக்குவதுடன் வீரியவிருத்தி செய்துகொள்ளும் வழிகளையும் தெரிவிக்கும். (8) அகததந்தரம்—இது ஸ்தாவர ஜங்கம விஷங்களையும் அதன் பரிஹாரங்களையும் போதிக்கும்.

இந்த ஆயுர்வேதமானது சுதேசவைத்தியத்துக்கு மூல கிரந்தங்கள் இக்கிரந்தங்களைக்கொண்டே இரிஷிகளும் முனிவர்களும் சித்தபுருஷர்களும் தத்தம் அநுபவத்துக்கொத்தபடி பல நூல்களைச் செய்திருக்கிறார்கள். சரகசாஸ்திரத்தை அநுஷ்டித்தவர்கள் காய வைத்தியர்களாகவும் சுசுருதத்தை அநுஷ்டித்தவர்கள் சஸ்திர வைத்தியர்களாகவும் முக்கியமாக கருதப்பட்டனர். சரகம் சுசுருதம் இவவிருகிரந்தங்களையும் மற்றவைகளையும் அனுசரித்துவாஹடாசாரியார் (இவரே வாக்படர் ஆவர்) அஷ்டாங்கஹிருதயம் அஷ்டாங்க சங்கிரஹம் என்றநூல்களை இயற்றினர். இப்பெருமை வாய்ந்தவைத்திய சாஸ்திரங்கள்உலகம்வியக்கத்தக்க பெருமையையும் விஸ்தீர்ணத்தையுங்கொண்டுள்ளன. நம்நாட்டு அரும் பெருஞ்சாஸ்திரங்கள் ஏனைய நாட்டுச்சாஸ்திரங்களைப்போல் தம்தமக்கான விஷயப் போக்கையே கொண்டொழுகி நில்லாது யாவும் பரலோக சாதனங்களுக்குச் சாதகங்களாய் முன்னின்று பின்னரே மானிடரின் இகசுகங்கட்கு உபயோகமாகின்றன. இவ்வழியில் ஏனைய சாஸ்திரங்களைக்காட்டிலும் வைத்தியசாஸ்திரமானது முதன்மையைப்பெற்றிருக்கின்றது. ஆயுர்வேதமானது அரோக திருடகாத்திரத்தையும் அழகையுங்கொடுத்து நீண்ட ஆயுளையுந்தருவதற்காக ஏற்பட்ட சாஸ்திரமென்று யாவரும் அறிவார்கள். இவையே சகல வைத்தியசாஸ்திரங்கட்கும் பொதுவான நோக்கங்களாகும். நம் நாட்டில் ஆயுர்வேதமானது முக்கியமாய் யோகிகளும் முனிவர்களும் சித்தர்களும் யோகவழிகளில் நின்று மனோவாக்குக்காயங்களால் பரம்பொருளின் வயப்பட்டு நீண்டகாலம் காலனைப்புறங்கண்டு நிஷ்டையில் நிலைத்திருப்பதற்குச் சாதகமாகவிருக்கும் கற்பங்கள் முதலிய பல உபாயங்களைப் பெரிதும் போற்றுகின்றது. இந்த ஆயுர்வேதமானது மானிடரின் நோய்களைப்போக்குவதற்கு மூன்றுவித சிகிச்சையை சொல்லப்பெற்றிருக்கிறது. அதாவது தேவ சிகிச்சை மானிடசிகிச்சை, அசுர

சிகித்சை, யென்று மூன்றுவகைப்படுகின்றது. இப்மூவகையும் 32 வித சிகித்சைகளை அடக்கிக்கொண்டுள்ளன. 1-வது தேவசிகித்சை-இது முறைப்படி செய்த பஸ்மசிந்தூரங்களைக் கொண்டு சாத்திய கஷ்டசாத்திய, அசாத்திய, ரோகங்களை நீக்குவதன்றியும் ரோகங்களின் தச அவஸ்தைகளில் ஒன்பதாவது அவஸ்தை வரையிலும் உதவுகின்றது. மேலும் அப்பஸ்மவருக்க மருந்துகள் சுவையற்று ஒரு மருந்தே பல பிணிகளையும் அனுபான பேதங்களால் போக்க ஆற்றலுடையதாய் ஏற்றல் எளிதில் கிடைத்தல் கடுகின் அளவு போன்ற அளவில் உபயோகமாதல், முதலிய தன்மைகளைக்கொண்டுள்ளது இதில் பல பஸ்மவகைகளிருப்பினும் ஓரே சிகித்சையெனப்படும்.

2. மானுட சிகித்சை-இது மூலிகை முதலியவைகளால் சுரசம், கஷாயம், சூரணம், லேகியம், கிருதம், தைலம், முதலிய 30 வகைகளைக்கொண்டுள்ளது. ஆக இவ்விரண்டு வகைகளும், 31 வித சிகித்சைகளாகி நமது ஆயுர்வேத பண்டிதர்கட்கு சமஸ்த ரோகங்களையும் நிவாரணஞ்செய்யப் பெருஞ்சாதகங்களெனப் பாராட்டப்பட்டு அதிருட்டமான வகைகளில் ஆச்சரியமான முதிர்ச்சியும் பெற்றிருக்கின்றன. அவற்றின் பெருமையை என்னென்றுரைப்பது. அவைகட்குத் தலைவணங்காத ரோகங்களும் இவ்வுலகில் உண்டோ. இவ்வகை மேம்பாட்டை அடைந்த நம்மவர்கள் மேற்கூறியமூவகைச் சிகித்சையில் மூன்ருவதாகச் சொல்லும் அசுர சிகித்சை என்னும் 32-வது சத்திர சிகித்சையை மூன் மருந்துகளால் நீங்காத வழியிலுள்ள சிலவற்றிற்கே உதவும் எனத்தெளிந்து இதை அலக்ஷியம் செய்து கையாடாமல் விட்டுவிட்டார்கள். ஆயினும் ஆயுதவர்க்க நூலொன்று சுசுருதரால் சொல்லப்பட்ட சுசுருதமென்னும் நூலிலும் தமிழில் ஆயுதவர்க்க நூல் திருமூலராலும், சாரீரம் என்ற ஒரு நூல் இடைக்காட்டராலும், இயற்றப்பட்டுள்ளது. இந்த சஸ்திர சிகித்சையான அறுத்தல், ஆற்றல், முதலியவற்றை பூர்வாசிரியர்கள் அப்பியசித்துத் தேர்ந்து பலபேருக்கு உதவிபுரிந்தார்கள் என்று தெரியவருகிறது. நிகழ்காலத்து வைத்தியர்கள் இந்த சஸ்திர சிகித்சையை பயப்கொண்டோ அல்லது வேறு காரணத்தாலோ கையாடாமல் நாவிதர்களுக்கும் சக்கிலிகளுக்கும் கொடுத்துவிட்டார்

களெனத் தெரிகிறது. இக்காலத்தும் குக்கிராமங்கள் பலவற்றுள் இராஜகட்டி முதலியவற்றை அறுக்காமலே பச்சிலை மூலிகையினுல் அந்தக்கட்டிகளை வேகவைத்து அறுத்து ஆற்றுவதை நாம் கண் கூடாகப்பார்க்கிறோம். தவிர சரீரத்தினுள்ளிருக்கும் ஸ்தானங்களைப் பரிசோதித்துப்பார்ப்பதற்கும் அதற்குரிய வியாதிகளைக்கண்டறிந்து சிகித்சை செய்வதற்கும் பூர்வாசிரியர்கள் தன் மனக்கண்ணுலும் பார்த்து அறிந்துகொண்டார்கள். மேலும் சிலர் பிரேதத்தைச் சேதித்துப்பார்த்துச் சரீர தத்துவங்களை அறிந்துகொண்டுமிருக் கிறார்கள். நம் சாஸ்திரங்களில் ஒரு காலத்தில் தேவேந்திரன் மண்டைக்குடைச்சல் வியாதியினுல் கஷ்டப்பட்டாரென்றும் தேவ வைத்தியர்கள் பலவித தைலங்கள் செய்து ஸ்நானம் செய்வித்தும் அந்த வியாதி நீங்காமல் கடைசியாகத் தேரையர் என்பவர் (அகஸ் தியரது சிஷ்யர்) இந்திரலோகம் சென்று தேவேந்திரனது சிரசில் மூளையுள்ள பாகத்தை அறுத்துப்பார்த்து அதிலிருந்த தேரை என் னும் ஒருவித வஸ்துவை வெளியே எடுத்து அறுத்த பாகத்தைத் தைத்து பச்சிலை மூலிகையினுல் ஆற்றிவிட்டதாகவும் அதனுல் அவருக்குத் தேரையர் என்கிற காரணப் பெயர் வந்ததாகவும் சொல் லப்பட்டிருக்கிறது. இவற்றை யெல்லாம் உற்றுப்பார்க்காமல் தற் காலத்தவர்கள் அறுத்தல் முதலியன மேனாட்டவர்களுக்கே உரித்த தென்றும் ஷை சிகித்சையில் மேனாட்டு சாஸ்திரங்களே பிரபலமான வையென்றும் ஆடம்பரம் செய்கிறார்கள். மேனாட்டு வைத்தியம் நமது தேசத்திற்கு வருவதன் முன்னமே நமது தேசம் ஆயுர்வேத சாஸ்திரத்தில் மேம்பட்டு நமது தேசத்தவர்கள் நோயற்ற வாழ் வோடு வஜ்ரதேகம் பெற்று பெருவாழ்வு வாழ்ந்து பூர்ணயுள் பெற் றிருந்தார்கள் என்பதற்கு அநேக நற்சாக்ஷிகள் உண்டு. மேனாட்டு நடையுடை பாவனைகளும் நாகரீகங்களும் மேனாட்டு வைத்தியமும் நம் தேசத்துக்கு வந்து நம்மவர்கள் அவற்றில் மயங்கின காலமுதல் நம்தேசம் வறுமைப்பிணியால் கஷ்டப்படுவதுடன்நாமும் எந்நேரமும் நோய்வாய்சிக்கி சரீரபலமிழந்து அற்பாயுள் புருஷர்களாயானோம்.

இவ்வளவு பெருமை வாய்ந்த நம் சுதேச வைத்தியம் இக்காலத் தில் குடத்திலிட்ட விளக்குபோல் ஒளிமங்கிக் கிடத்தலுக்கு அர

சாங்கத்தாரது ஆதரவின்மையே முக்கியகாரணமெனலாம். ஒவ்வொரு அரசாங்கமும் தம்தமக்கு ஆதிக்கியம்வருங்காலத்தில் தங்கள் தங்கள் மதாசாரக்கொள்கையினையும் கல்வியினையும் வியாபாரத்தினையும் அபிவிருத்திசெய்வதற்கு ஆதரவு தேடுவது இயற்கை அவ்வாறே நமது அரசாங்கமும் ஆங்காங்குள்ள வைத்தியசாலைகளையும் கல்விச்சாலைகளையும் நியமித்து தம் மேனாட்டு முறையைப் பரப்புகின்றது இந்திய மக்களும் மேனாட்டு வைத்திய முறையைக்கற்று டாக்டர்களெனப் பட்டம் பெற்று மகிழ்கின்றனர். பாரத தேசத்திற் பிறந்து பாரத உப்பைத்தின்று வளர்ந்தவர்களாகிய நம்மவருட் சிலர் தற்கால மேனாட்டு நாகரீகச்சேற்றில் அழுந்தி அன்னியநாட்டு நடையுடை பாவனைகளிற் பயின்று நாம்யார்? மதம் என்பதென்ன? சாதியேது? சமயமேது? ஆசார அநுஷ்டானங்கள் யாவை? கர்மம் எங்கே? புண்ணிய பாவம் எப்படியிருக்கும்? பெரியோர் யாவர்? சாஸ்திரம் யாது? எல்லாம் கட்டுக்கதை? எவனோ ஒருவன் நம்மை அடக்கி ஆண்டு ஏமாற்றிப் பொருள்பறிக்கச் செய்துள்ள சூழ்ச்சி இது அப்பன் எதிர்ப்பட்டான், ஆத்தாள் மதப்பட்டாள், நான் புறப்பட்டேன் அவை யாவும் இயற்கை பிதாமாதாக்கள் என்போர் யாவர்? அவர்களுக்கும் நமக்கும் என்ன சம்பந்தம். மேனாட்டாரே தெய்வங்கள் அவர்கள் வாக்கே தெய்வவாக்கு. அவர்கள் ஆசாரமே சதாசாரம் என்று விதண்டாவாதம் பேசித்திரியும் போலிகள் பரவிவரும் இக்காலத்தில் சுதேசவைத்தியர்களுக்கு என்ன பெருமை உண்டாகப் போகிறது இந்தச் சுதேசவைத்தியத்துக்குப் பெருமையில்லையென்றும் ஏழைமுதல் தனவந்தரீஈறாகவுள்ள சகலரும் மேனாட்டு வைத்தியத்தையே நாடுகிறார்களென்றும் நம்மனோர் குறைகூறுகின்றதைக் காண்கிறோம். அதற்குக்காரணம் பலவாயிருந்தாலும் நமது சுதேச வைத்தியர்களிடம் பெருங்குறை யிருப்பதைச் சொல்லாமலிருக்க முடியவில்லை. எவ்வாறெனில் ஆயுர்வேத சாஸ்திரத்தில் வாசனையே சிறிதுமில்லாமல் இரண்டொரு மருந்துகளை மாத்திரம் அச்சு புத்தகங்கள் மூலமாக அறிந்து அவைகளைத் தயாரித்துக்கொண்டு அதோடு மேல்நாட்டு மருந்துகளையும் சேகரித்துச் சேர்த்து நாடிப் பரீக்ஷையறியாமல்வியாதி லக்ஷணம்தெரியாமல் சாத்தியரோகங்களை அசாத்தியரோகமாகச் சொல்லி இந்த ரோகம் என் கைபட்டமாத்தி

ரம் பறந்தோடும் இத்தகைய அசாத்திய ரோகங்கள் எத்தனையோ நான்பார்த்துத்தீர்த்து விட்டேன். தென்றிசைக் கோமனுகியயமனும் என்னைக்கண்டு நடுங்கிடுவான், என்று வாக்சாதுரியமாகப்பேசி ரோகியிடம் பணம் பறிக்கிறார்கள். பண்டிதர்கள் வியாதிஸ்தர்களது பிராயகாலம், ரோகநிதானம், முதலியவற்றை யறிந்து அதற்குச்சிகிச்சையோடு சாந்திகள் செய்தலும் வேண்டும். தவிர வைத்தியர்கள் கண்கள் 3, தலைகள் 4, முகங்கள் 5, கைகள் 6, சரீரங்கள் 8, கால்கள் 10, ஆகிய இவ்வாறு குணங்களை அறிந்திருத்தல் வேண்டுமென்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. எவ்விதமெனில் கண்கள் 3 என்பது ஔஷதத்தின் சுகுணம், துர்க்குணம் அதன் சுத்தி வகைகள் ஆக மூன்றாகும். தலைகள் 4 என்பது வாதபித்த சிலேஷ்ம துவந்த்வங்கள் ஆக நான்காகும். கைகள் 6 என்பது ஆறு சுவைகளாகும். சரீரம் 8 என்பது ரோகியை அஷ்டவிதமாகப் பரிக்ஷித்தல், கால்கள் 10 என்பது பத்து நாடியும் பத்து வாயுவும் அறிதல் முகங்கள் 5 என்பது பிண்டநிலை ஐந்து ஆகும். இவ்வாறு குணங்களையும் அறியாமல் வைத்தியனெனப் புறப்பட்டு சிகித்சை செய்ய ஆரம்பித்தால் அவன் பிரம்மஹத்தி தோஷத்துக்காளாவான் என்று சொல்லப்படுகின்றது.

நோயாளிக்கு மருந்துகொடுக்கு முன்னர் முதலில் ரோகியின் வயது அவன் சரீரலக்ஷணம் அதாவது வாதபித்த சிலேஷ்மம் துவந்த்வங்கள், சரீரபலம், தொழில், நோய் வந்ததற்குகாரணம் நோயினால் தான் அனுபவிக்கும் கஷ்டங்கள், பசி விபரம். மலஜலக்கிரமாதிகள், சுவை, முதலியவற்றை அறிந்துகொண்டு நாடி முதலிய அஷ்டவித பரீக்ஷையால் வியாதி நிர்ணயம் செய்தல் வேண்டும். அதாவது (1) நாடி (2) ஸ்பரிசம் (3) ரூபம் (4) சப்தம் (5) நேத்திரம் (6) மலம் (7) மூத்திரம் (8) ருசி என எட்டுவகை பரீக்ஷையாகும்.

பாலர். குமாரர் விருத்தர், என்கிற வயதுக்குத்தக்கபடி மருந்தின் அளவைக் குறைத்தும் கூட்டியும் கொடுத்தல் உசிதம். வாத பித்த சிலேஷ்ம குணங்களால் சரீர கட்டளை மாறுபடுவதுபோல் மருந்துகளும் அக்கட்டளைக்குத்தக்கபடி வித்தியாச குணங்களைக் காட்டும். ஆதலால் அந்தச்சரீர சுபாவங்களுக்குத் தக்க ஔஷதங்

களைத்தகுந்த அளவில் உபயோகிக்கவேண்டும். இதை ஒவ்வொரு வைத்தியரும் அனுபவத்திற்கு கொண்டுவர வேண்டியது அவசியம்: நமது மதக்கிரந்தங்களும் வைத்திய கிரந்தங்களும் அனேக நூற்றுண்டுகளுக்குமுன்னமே ஏனையஜாதியர்கள் நாகரீகமின்றி காட்டுமிருகங்கள்போல் திரிந்துகொண்டிருந்த காலத்தும் பிரகாசித்துக்கொண்டு இருந்ததென்பதற்கு மேனுட்டார் எழுதிய நூல்களே சாக்ஷியாகும். ஆனுல் இப்போது நம்மவர்கள் புராதன நூல்களில் நம்பிக்கை யில்லாமலிருக்கிறுர்கள். இதற்குக்காரணம் இவர்கள் அக்கிரந்தங்களை ஆழ்ந்து பரிசிலனை செய்யாதது ஒருபுறமிருக்க மேனுட்டுக்கல்வி நடையுடை பாவனைகளும் கால மாறுபாடுகளும் குறுக்கிடுகின்றன. தற்காலத்தில் கிளம்பியிருக்கும் வைத்தியர்களை யும் வைத்திய நூல்கள் எழுதுபவர்களையும் கணக்கிட முடியாது. அவர்களுக்குள் அநேகர் வைத்திய புத்தகத்தில் நாலு ஐந்து பாடல்களைக்குருட்டுப்பாடமாகச் செய்துகொண்டு பாமர ஜனங்களிடம் ஒப்புவித்து அவர்களை மயக்கிப்பணம் பறிக்க வழிதேடுகிறுர்கள். கல்வம்பிடித்து அரைக்கத் தெரியாதவர்களும் லேகியங்கள், பஸ்மங்கள், சிந்தூரங்கள், தைலங்கள், முதலியவற்றின் செய்பாக கைபாக முறை இன்னதென்று அறியாதவர்களும் புத்தகத்தை அங்குமிங்குமாகப் படித்தவர்களும் பல இங்கிலீஷ் மருந்துகளைக் கையாளுபவர்களும் நோயின் லக்ஷணம் அஃது உண்டாவதற்குக்காரணம் இன்னதென்று அறியாதவர்களும் சுதேசவைத்தியர்களெனப்பெயர்வகித்து சிகித்சைசெய்ய முன்வந்தால் ரோகங்கள் எவ்வாறு நிவர்த்தியடைந்து ரோகிகள் சுகப்படுவார்கள். அதோடு அவர்கள் வைத்திய சாஸ்திரம் அறிந்த பெரியவர்களை அடுக்காமலும் ஆயுர்வேத சாஸ்திரத்தைச் சரிவர படியாமலும் புஸ்தகக்கடையிலுள்ள ஒன்று இரண்டு நூல்களை வாங்கிப்பார்த்தும் பல வைத்திய நூல்களை எழுதி விற்பனைசெய்கிறுர்கள். இத்தகையோர் உலாவிவருங்காலத்தில் சாஸ்திரோக்தமான வைத்தியக்கல்வியில் தேர்ச்சியடைந்த உத்தம வைத்தியர்களுக்கு என்ன பெருமை உண்டாகும். இவற்றை யெல்லாம் கண்டறிந்த அறிவாளிகள் நாட்டு வைத்தியத்தில் நம்பிக்கையற்று மேனுட்டு வைத்தியத்தையே நாடுகிறுர்கள். இதனுலேயும் நமது ஆயுர்வேத சித்தவைத்தியம் மறைந்து வருகின்றதென்னலாம்,

இத்தகைய அருமையும் பெருமையும் வாய்ந்த நமது வைத்திய முறைகள் ஓங்கிவளர்ந்து உலகத்திற்கு நன்மை பயக்கவேண்டுமாயின் அஃது அறிவின் மேம்பாட்டால் கிடைக்கும். வைத்தியர்கள் ஒற்றுமை சேரவேண்டும். வடமொழி ஆயுள்வேதம் நமதல்லவென்றும் தென்மொழி ஆயுர்வேதம் நமதல்லவென்றும் ஒருவருக்கொருவர் இடர்பட்டு இதனின்றும் அது வந்தது அதனின்றும் இது வந்தது என வீண் சண்டையிட்டுக்கொண்டு சாஸ்திர விருத்திக்குண்டான பெரிய நோக்கங்களை இழப்பது மிகவும் வியசனிக்கத்தக்கது. நீண்டகாலமாக இவ்விரண்டு முறைகளும் ஒன்றோடொன்று கலந்து ஒன்றுக்கொன்று பேருதவிபுரிந்துகொண்டும் இருக்கின்றது. அராபியர்கள் தென்னாட்டில் வியாபித்தகாலம் இந்த ஆயுர்வேதத்தையே கைக்கொண்டு அவர்கள் முறை நம்மவர் வைத்தியமேயாகித் தத்தம் தனி இயல்புகளும் மாறாது முதிர்ந்து வளர்ந்திருக்கின்றதாதலால் இதனைச்செவ்வனே ஓர்ந்து வடமொழி வல்லாரும்தென்மொழி வல்லாரும் ஹக்கீம்களும் ஒரு தாய் வயிற்றில்பிறந்தசகோதரர் என்ற எண்ணம் சிறிதும் மனத்தைவிட்டகலாது ஒத்துழைக்கும்படியும் மாக்ஷிமைதங்கிய நமது இராஜாங்கத்தார் நம்முன்னேற்றத்திற்கு உதவிசெய்யும்படியும் எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் புரிவானாக. சுபம்.

---

## சுதேசவைத்தியமும் விதேச வைத்தியமும்.

(மதுரை பண்டிட் நாராயண அய்யங்கார் அவர்கள் எழுதியது)

சுதேச வைத்திய நூல்களுக்கும் விதேசவைத்ய நூல்களுக்குமுள்ள வித்தியாசத்தை வைத்தியர்களனைவரும் கவனித்தல் அவசியம். சாதாரணமாக வைத்தியன் என்பவன் அறிந்துகொள்ளவேண்டிய விஷயங்களில் பிரதான விஷயங்கள்மூன்றெனக்கூறலாம். அதாவது காரணம் அல்லது நிதானம், லக்ஷணம், ஔஷதம் ஆகிய இவைகளே. இவற்றை முறையே ஹேது ஸ்கந்தம், லிங்கஸ்கந்தம், ஔஷதஸ்கந்தமென நூல்கள் கூறுகின்றன. இவற்றின் அவசியத்தையாரும் ஆக்ஷேபிக்க முடியாது. இவற்றையறியாதவர்கள் சுதேசவைத்தியர்களாகவோ அல்

லது ஆங்கிலவைத்தியர்களாகவோ இருக்கமுடியாதென்பது நிர் விவாதமாக ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயம். இம்மூன்று விஷயங்களும் விதேச நூல்களைக்காட்டிலும் சுதேச நூல்களிலேயே விசேஷித்துக் கூறப்பட்டிருக்கின்றதென்பதையே எடுத்துக்காட்டுகிறோம். முதலாவதாகிய ஹேதுஸ்கந்தமென்பது வியாதிகளின் காரணங்களைக் கூறும் பாகம். ஒவ்வொரு வியாதியினுடையவும் காரணத்தைத் தெரிந்துகொள்ளவேண்டியது வைத்தியனின் முதற்கடமை. ஆங்கில நூல்களில் இப்பாகம் மிகவும் விஸ்தாரமாக வர்ணிக்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய எல்லா வியாதிகளும் ஓர்வித விஷப்பூச்சிகளாலும், கிருமிகளாலும் உண்டாகின்றனவென்பது ஆங்கிலநூல்களின் கொள்கை. அப்பூச்சிகள் எவ்வளவு நாட்கள் சரீரத்தில் தங்கி மூட்டை யிடுகின்றனவென்றும், சரீரத்தில் எவ்விதம் பரவுகின்றனவென்றும், எவ்விதம் பேதங்களை யடைகின்றன வென்பதும், மற்றவரை எவ்விதம் தாக்குகின்றதென்பதும், இதுபோன்ற விவரங்களையே அனுபவத்தில் அறிந்து ஆங்கிலத்தில் ஹேதுஸ்கந்தமென பல நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. டாக்டர் green என்பவர் எழுதிய ஓர் ஆங்கில நூல் இதையே விவரிக்கின்றது. மற்ற நூல்களும் பெரும்பாலும் பெரும் பாகத்தில் இவற்றையே விவரித்திருக்கின்றன. ஆங்கில வைத்தியர்கள் அனைவரும் இப்பாகத்தைப் படித்தறிந்திருந்த போதிலும் ஒரு சிலரே இதில் நிபுணத்வம் பெறுகின்றனர். அவர்கள் Bacteriologist என அழைக்கப்படுகின்றனர். ஆங்கில வைத்தியர்கள் கிரமப்பட்டுபடிக்கும் இப்பாகம் பிரதிதினம் அவர்கள் செய்யும் சிகித்சாமுறையில் பயன்படுவதில்லை. தினசரி சிகித்சைத்துறையில் அவர்கள் இப்படிப்பை உபயோகப்படுத்த வசதி குறைவாக இருப்பதே அதற்கு முக்கிய காரணம். உதாஹரணமாக பிளேக் வியாதியை எடுத்துக்கொள்ளுவோம். இவ்வியாதி ஓர் பூச்சியால் உண்டாவதாக அவர்கள் கொள்கை. நோயாளியின் ரக்தம் முதலானவைகளை எடுத்து ஓர் வகை பூதக்கண்ணாடியின் சகாயத்தால் அதிலுள்ள பூச்சிகளைத் தெரிந்துகொண்டால்தான் அந்நோயை அவர்கள் பிளேக் எனச்சொல்லவேண்டும். இவ்விதம் செய்வதில் ஏராளச்செலவும் காலஹரணமும் ஏற்படுகிறது. ஆகவே அவர்கள் அவ்வழியை விட்டுவிட்டு அடையாளங்களைக்

கொண்டே வியாதியை நிஷ்கர்ஷை செய்யவேண்டியதாகின்றது. ஆகவே பூச்சிகளின் அறிவு புத்தகத்தில் அடங்கியும்லக்ஷணங்களின் அறிவுதான் சிகித்சைக்கு உதவுவதுமாகின்றது. ஆகவே சிகித்சையில் லக்ஷணங்களுக்குத்தான் முக்யத்தன்மை டளிக்கவேண்டியதாகின்றது. பூச்சிகளின் ஒவ்வொரு நிலைமைக்கும் தக்கவாறு மருந்து கொடுக்கவேண்டுமென்ற நிர்பந்தமிருந்தால் பூச்சிகளின் ஒவ்வொரு நிலைமையையும் பிரதிதினம் தெரிந்துகொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படும். வியாதியை நிஷ்கர்ஷிப்பதும் உடனே மருந்து கொடுப்பதுமென்ற முறையில் பூச்சிகளின் விசேஷித்த அறிவு அதிகப்பிரயோஜனமின்றியிருக்கின்றது. இவ்விதமே மலேரியா என்ற நோயிலும் அடையாளங்களால் அந்த நோயைத் தெரிந்துகொண்டு கொய்னவை உபயோகிக்கலாம், அந்நோயின் பூச்சிகளின் நிலைமை முதலியவைகளின் அறிவு கொய்ன கொடுக்கும்பொழுது அவசியமாவதில்லை. ஆகையால் ஆங்கில நூல்களில் பூச்சிகளைப்பற்றிய பெரும்பாகம் படிப்பதற்கு மாத்திரம் ஏற்பட்டதேயன்றி தினசரி வைத்ய வாழ்க்கையில் பயன்படுவதில்லை. ஆனல் சுதேச நூல்களில் இந்த ஹேது ஸ்கந்தம் முழுவதும் சிகித்சையில் மிகவும் பிரயோஜனப்படுகின்றது. சுதேச நூல்களில் வியாதிகளுக்குக் காரணம் இரு வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. சமீபகாரணம் விலகியகாரணம் என்று அவைகளுக்குப் பெயர். சமீபகாரணம்திரிதோஷங்களின் பிரகோபம். திரிதோஷங்களின் நிலைமை கெட்டே வியாதிகள் உண்டாவதால் வியாதிகளுக்குத் திரிதோஷப் பிரகோபமே காரணமாகின்றது. திரிதோஷங்கள் சரீரத்துள் வியாபித்திருப்பதால் அவை சமீபகாரணங்களாகின்றன. விலகிய காரணமென்பது காலம், காற்று, ஜலம், இவைகளின் மாறுதல்களும் பூச்சி, புழுக்கள் முதலியவைகளும் இவைகள் சரீரத்துக்குப் புறம்பானவையானதால் விலகிய காரணங்களாகின்றன. விலகிய காரணங்களால் சமீபகாரணம் தோன்றி வியாதிகள் காணுகின்றனவென்பது சுதேச நூல்களின் கொள்கை. விலகிய காரணங்களின் அறிவு சிகித்சையில் விசேஷித்துப் பயன்படாமல் போனபோதிலும் சமீபகாரணங்களின் அறிவு சிகித்சையில் மிகவும் உபயோகமுள்ளதாக இருக்கின்றது. இதில் பூச்சிகளின் நிலைமை ஆங்கில வைத்தியத்தில் போல சுதேச வைத்தியத்திலும் உபயோகமாவதில்லை. உதாஹரணமாக பிளேக் என்றநோய் திரிதோஷ நிலைமைகளை அனுசரித்து பலவகைப்படுவதால் வியாதியின் பேதங்

களுக்குக் காரணமாகியத் திரிதோஷப்பிரகோபப் பிரகாரங்களை நிதானித்துத் தெரிந்துகொள்ளவேண்டும். பிறகு திரிதோஷங்களை அனுசரித்தே வியாதியில் சிகித்சை செய்யவேண்டியிருப்பதால் சிகித்சையில் ஹேது ஸ்கந்தம் மிகவும் உதவுகின்றது. ஆகவே சுதேச நூல்களில் பூச்சி புழுக்களைப் பற்றிய பிரஸ்தாபம் மிகவும் குறைவாக இருக்கின்றது. "ஸர்வே ஸாங்கிராமிகா: ப்ரோக்தா:" என்று எல்லா வியாதிகளுமே தொத்து நோய்களாக நூல்கள் கூறுகின்றன. பூச்சி புழுக்களால் உண்டாகி வியாபிக்கும் நோய்களுக்குத்தான் தொத்து நோய்கள் எனப்பெயர். சுதேச நூல்களில் இவற்றை விஸ்தாரமாக வர்ணிக்காமலிருத்தல் ஓர் குறையாகாது. இரண்டாவது லிங்க ஸ்கந்தம். அதாவது வியாதிகளின் லக்ஷணங்களை வர்ணிக்கும் பாகம். சரீரத்துள்ளும் வெளியிலும் தோன்றும் லக்ஷணங்கள் அல்லது குறிகளைக்கொண்டு வியாதியை நிர்ணயித்தல். இந்த பாகம் சுதேச நூல்களில் மிகவும் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆங்கில நூல்களைவிட சுதேசநூல்களில் இப் பாகத்தைப்பற்றியமட்டில் விசேஷமென்னவெனில் ஆங்கில நூல்களில் வெளிப்படையாக லக்ஷணங்கள் தெரிந்தபிறகு வியாதியை நிர்ணயிக்க வழி சொல்லப்படுகின்றது. சுதேச நூல்களிலோவெனில் வியாதி வெளிப்படையாகக்காணுவதற்குப்பலமாதங்கள் முந்தியே தோன்றும் பூர்வரூபங்கள் அல்லது முற்குறிகளைக்கொண்டுபலமாதங்கள் கழித்து வரப்போகும் வியாதியை முற்கூட்டியே ஊகிக்கும்படி வழிகள் சொல்லப்பட்டிருக்கின்றன. தவிரவும் சுதேச நூல்களில் வியாதிகளின் சாத்தியா சாத்திய நிலைமைகளும் அரிஷ்டம் என்ற மரணக்குறிகளும் விசேஷித்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. அரிஷ்டமென்பது மனிதனுக்கு வியாதியுள்ள காலத்திலும் வியாதியில்லாத காலத்திலும் சரீரத்தின் உள்ளும் வெளியிலும் காணும் சில குறிகள். அவைகாண்கில் மரணம் நிச்சயம். "அரிஷ்டம் நாஸ்திமரணம் திருஷ்டரிஷ்டம் சஜீவிதம்." உலகத்தில் மனிதனுக்கு அரிஷ்டம் காணுமல் மரணம் சம்பவிக்காது. அரிஷ்டம் காண்கில் ஜீவனும் இராது. இந்தபாகம் சுதேச நூல்களுக்கே சொந்தமானவை. ஆங்கில நூல்களில் இது காணப்படவில்லை. ஆகவே லிங்க ஸ்கந்தம் சுதேச நூல்களில் பரிபூர்ணமாயும் ஆங்கில நூல்களில் மிகமிகக் குறைவாகவுமே காணப்படுகின்றது. மூன்றுவது ஒளஷதஸ்கந்தம். ஒவ்வொரு வியாதிக்கும் பலிதமான மருந்துகள் இப்பாகத்தில்

சொல்லப்படுகின்றன. ஒரே வியாதியில் அதன்பற்பல நிலைமைக ளுக்குத்தக்கவிதமாக பலமருந்துகள் தேவை யாகவிருப்பது அனுப வசித்தம். உலகத்திலுள்ள ஜனங்களுக்கு வரும் வியாதி ஒரே பெயருள்ளதாகவிருந்தாலும் நோயாளிகளின் சரீரக்கூறு ஒரு மாதிரி யாகவிராமல் பேதப்பட்டிருப்பதால் நோயாளி களனைவருக்கும் ஒரே வித மருந்து போதுமானதென்று சொல்லமுடியாது. மலேரியா வில் கொய்னு சில சரீரங்களுக்கு ஒத்துக்கொள்வ தில்லை. அவர் களுக்கு வேறுமருந்துகள் கொடுக்க வேண்டியிருக்கின்றது. அபினி மலத்தைக் கட்டக்கூடியதே. ஆனல் அதுவேசிலருக்கு மலப்போக்கை யுண்டுபண்ணுகின்றது. ஆகவே நோயாளியை கவனித்தே மருந்து கொடுக்கவேண்டியிருப்பதால் ஒரு நோய்க்கே பலமருந்துகள் தேவையாகின்றன. இந்த பாகத்தில் சுதேசநூல் களுக்கும் ஆங்கில நூல்களுக்கும் மிகுந்த வித்தியாசம்காணப்படுகின் றது. ஆங்கிலநூல்களில் வியாதிகளின் லக்ஷணம் முதலியவை களின் விவரங்கள் பலபக்கங்களை யடைந்துகொண்டிருக்கின்றன. ஆனல் மருந்து விவரம் சொல்லும்பொழுது சில வரிகளில் அடங்கி விடுகின்றது. சுதேச நூல்களிலோ வெனில்வியாதிகளின் லக்ஷ ணங்கள் சில வரிகளில் அடங்கியும் மருந்துகளின் விவரம் பலபக்கங் கள் கொண்டதாகவும் இருக்கின்றது. உதாஹரணமாக டாக்டர் ஆஸ்லர் என்பவர் பல ஆங்கிலநூல்கள் எழுதியிருக்கின்ருர். அந்த நூல்களை ஆங்கில வைத்தியர்கள் மிகவும் கொண்டாடுகின்றனர். அன்ஞர் நூலில் க்ஷய வியாதியைப்பற்றிய லக்ஷண விவரங்கள் 90 பக்கங்கள் கொண்டதாகவிருக்கின்றன. மருந்து விவரங்களோ வெனில், நான்கு பக்கங்கள் கொண்டதாகக் காணப்படுகின்றது. சுதேச நூல்களில் க்ஷய வியாதி விவரம் ஒரு பக்கத்தில் அடங்கியும் மருந்துவிவரங்கள் இருபது பக்கங்கள் கொண்டதாகவும் இருக்கின் றன. இப்படியே ஒவ்வொரு வியாதியிலும் காணலாம். நேரில் காணக்கூடிய வியாதி விவரங்களை விஸ்தரித்தும் நீண்ட அனுபவத் தில் அறியக்கூடிய மருந்துவகைகளைக் குறைத்தும், ஆங்கிலநூல்கள் கூறுகின்றன. சுதேச நூல்களோவெனில் நேரில் காணக்கூடியவை களைக்குறைத்தும் நீண்டகாலம்அனுபவித்து அறியவேண்டியமருந்து வகைகளை விஸ்தரித்தும் கூறுகின்றன. இவ்விதமிருந்தும் சுதேச நூல்களில் குறைகூறும் அறிவிலிகளுக்கு ஈசன் அருள் செய்வாராக.

சுபம்.

## சர்மரோகமும் அதன் பரிஹாரமும்.

(கரூர் ஆயுர்வேத வைத்தியர் P. S. ராமசர்மா அவர்கள் எழுதியது)

ஆங்கிலத்தில் தத்காலம் leprosy என வழங்கப்படும் குஷ்ட ரோயையும் அதுபோன்ற மற்ற சர்மரோகங்களையும் அதன்சிகித்சையையும் சுருக்கமாக எழுதுகின்றேன். "ஸம்க்ஷேபத: க்ரியாயோகோ நிதான பரிவர்ஜனம்" என்று பெரியோர்கள் கூறுகின்றனர். வியாதியின் காரணத்தை அறவே ஒழித்தல் சுருக்கமாக சிகித்சையெனலாம் என்பது அதன் பொருள். அபத்ய முறைகள் வியாதிகளுக்கு விசேஷித்த காரணமெனவும் மற்றவை சாமான்ய காரணமெனவும் அவர்களின் நோக்கம் புலப்படுகின்றது. செய்யவேண்டிய கர்மாக்களை விடுவதும் செய்யக்கூடாத கர்மாக்களைச் செய்வதும் மிகுந்த தீங்கை விளைவிக்குமென்பது அனைவருமறிந்ததே. ஆரோக்யத்தில் விருப்புமுள்ளவன் ஹிதத்தையே அனுஷ்டிப்பான். ஆரோக்ய காரணத்தை அறியாவிடில் அவன் யத்னம் ஸபலமாகாது. ஆரோக்ய காரணங்களை யறியும்பொழுது அநாரோக்ய காரணங்களும் புலப்படுவதால் அவற்றை விலக்க நிச்சயமாக யத்னம் செய்ய நேரிடுகின்றது. ஆகவே ஆரோக்ய பிரதிபந்தகங்களான காரணங்கள் விலக்கப்படும்பொழுது ஆரோக்யத்தை யனுபவிக்க முற்படுகிறான்என்பதைக் கொண்டுதான் முற்கூறிய வசனம் எழுதப்பட்டிருக்கிறது. ஆரோக்யத்திற்கு இன்றியமையாதசௌசம்முதலியவைகளை அலக்ஷியம்செய்வதால் சரீரமலங்கள் விருத்தியடைந்து தாதுக்களும் ரசாதிகளும் கெட்டு அவைகளின் ஆசயங்களையும் சரீரத்தையும் தூஷித்து பற்பல ரோகங்கள் உண்டாகக் காரணமாகின்றன. அவ்விதமின்றி ஆரோக்ய சாதனங்களை யனுஷ்டித்தால் நோய்கள் அணுகா. நோய்களைத்தடுத்தல், தணித்தல், இவைகளை மனதில்கொண்டு நமது முன்னோர்கள் விஸ்தாரமான நூல்களை யியற்றி நமது சம்சயங்களை யகற்றியுள்ளார்கள். வெளியிலுள்ள பஞ்சமகாபூதங்கள் நல்ல நிலைமையிலிருப்பின் அதை அனுசரித்துப் பஞ்சபூதங்களாலாகிய நமது சரீரமும் ஆரோக்ய நிலைமையிலிருக்கும். அவை கெடின் அவற்றால் நமது சரீரமும் பாதிக்கப்படுகின்றது. காலாதி காரணத்தால் வெளி பஞ்சபூதங்கள் கெடுகின்றன. தினசர்யா முதலிய அத்தியாயங்களில் சொல்லியுள்ள நியமங்களை அனுசரித்து நடந்தால் நித்ய ஆரோக்யம் பெறலாமென்பதும் யாவரும் அறிந்ததே.

இங்கு பொதுவாக ஆங்கில வைத்திய நூல்களிலுள்ள ஆரோக்ய காரணங்களை அறிந்தால்தான் வைத்தியத்தில் நாம் நைபுண்யமடையலாமென சுதேசவைத்தியாபிமானிகளில் கூட சிலர் நினைக்கின்றனர். இவர்களை யானையுடன் ஒப்பிடலாம். யானை தனது சரீரம் பெருத்திருந்த போதிலும் சிறிய கண்களையுடையதா யிருப்பது கொண்டு மற்ற வஸ்துக்கள் பெரியவைகளாகவும் தன்உரு சிறியதாகவும் கருதும். அதுபோலவே இவர்களும் விஸ்தாரமாக நோய்களை வர்ணிக்கும் சுதேச நூல்களைப் பயின்றிருந்தும் சிறிய வஸ்துபோன்ற ஆங்கில நூல்களைக்கண்டு பிரமிக்கின்றனர். இவர் களுக்குத் தங்கள் உருவம் நன்கு புலப்பட்டால் பிறர் பொருள்களை புறக்கணிப்பர் என்பது திண்ணம். ஆங்கில வைத்தியர்கள் ஒவ்வொரு வியாதியிலும் வியாதிக்குக் காரணமான கிருமிகள் என்னவென்பதையே முக்கியமாக ஆராய்வார்கள். இது சமுத்திரத்தி லுள்ள மணல்களைக் கணக்கிடுவதாகும். கிருமிகளை அறிந்துவிடுவ தாக வைத்துக்கொள்ளுவோம். அறிந்தபிறகு அவைகளை நிவர்த் திப்பதும், தடுப்புதுமென்ற இந்த முக்கிய சிகித்சை அவர்களுக்கு ஆகாயக்கட்டிடமாக விருக்கின்றது. கண்களுக்குப் புலப்படாத அந்த நோய் கிருமிகளைக் காணுவதற்காக மிகுந்த பிரயாசை யெடுத்துக் கொண்டு சூக்ஷ்மக்கண்ணாடி முதலியவைகளைக் கண்டுபிடித்து இந் தச்சாதனங்கள் சுதேச வைத்தியத்தில் கிடையாதென குற்றம் சொல் வதும் ஸகஜமாகவிருக்கின்றது. இவர்கள் கண்டுபிடித்ததாகச் சொல் லும் விஷயங்களும் மாதாமாதம் மாறிக்கொண்டே வருகின்றது. இவை உறுதிப்படும் காலம் கடவுளுக்குத்தான் தெரியும். இவ்விதம் உலகம் பிரண்டுகொண்டிருக்கும்பொழுது நமது சாஸ்திரத்தின் மூல தத்வத்தை வெகு வெகு சிலர்தான் அறிந்திருக்கமுடியும் "நார்த்தார்த்தம் நாபி காமார்த்தம் அத பூததயாம் பிரதி" பணத்திற் காகவோ அல்லது காமத்தினாலோ முனிகள் நூல்களை இயற்ற வில்லை. கேவலம் ஜீவராசிகளின்மேல் கருணையுற்றே நூல்களை. இயற்றியுள்ளார்கள் என்ற இவ்வுண்மையை நாம் மனதில் கொண் டால் நாம் நமது நூல்களின் மேன்மையை யறிவோம்.

உலகத்தில் காணும் சகல நோய்களும் பூச்சிகளாலேயே உண் டாகின்றன. இதை நமது முன்னோர்கள் ஒப்புக்கொண்டிருக்கின் றனர். ஆனால் அவைகளின் அறிவால் சிகித்சையில் பலன் உண்டா

என்பதே கேழ்வி. சிகித்சைகளில் அவைகளுக்குச் சற்றும் உபயோகமில்லாமையால் அவைகளின் விரிவை நமது முன்னோர்கள் உபேக்ஷித்தனர். பூச்சிகளால் பிரகோபம் அடைந்தத் திரிதோஷங்களைச்சீர்படுத்துவதே ரோகநிவாரண வழியென அவர்கள் உபதேசித்தனர். நோய்களுக்குக்காரணமான பூச்சிகளைப்பற்றி நம் முன்னோர்கள் பலஇடங்களில் குறிப்பிட்டிருக்கின்றனர். உதாஹரணமாகக்காய்ச்சலை எடுத்துக்கொள்ளுவோம். "ரூக்ஷம்ஹிதேஜோ ஜ்வரக்ருத்" பசையற்றதேஜோவஸ்துதான்காய்ச்சலையுண்டுபண்ணுகிறதுஎன்பது இதன் பொருள், காய்ச்சல் அனைத்தும் ரூக்ஷமான தேஜோ வஸ்துவால் உண்டாகிறதென்பது சித்தமாகிறது. காய்ச்சலுடன் கூடிய எல்லா தொத்து நோய்களிலும் முற்கூறிய வஸ்துவே காரணமாகின்றது. நமது முன்னோர்கள் கூறியுள்ள காய்ச்சலுக்குக்காரணமாகிய இந்த தேஜோ வஸ்துதான் ஆங்கிலத்தில் Toxin எனப்படுகின்றது. Toxin என்பது ஓர்வகை விஷம். திரிதோஷங்களே வியாதிகளுக்கு முக்கிய காரணமென்ற ஆயுர்வேதக்கொள்கை விரோதிக்குமேயென கேழ்வி கேழ்க்கலாம். சுதேச நூல்கள் திரிதோஷ பிரகோபம் வியாதிகளுக்கு முக்கியகாரணமெனவும், ஆனால் அப்பிரகோபத்திற்கு அஹிதஸேவநம் காரணமெனவும் கூறுகின்றது. ஆகவே பூச்சி முதலிய பல காரணங்களால் திரிதோஷங்கள் பிரகோபத்தையடைந்து ரோகங்கள் உத்பவிக்கின்றன என்ற கொள்கையில்குற்றம் கூற வழியில்லை. நமது முன்னோர்கள் வியாதி கிருமிகளை அறிந்திருந்தும் சிகித்சையில் உபயோகமில்லாத காரணத்தைக்கொண்டு தாங்களும் அதில் பரிசிரமப்படாமலும் நம்மையும் பரிசிரமப்படும்படி செய்துவைக்காமல் திரிதோஷங்களையே நமக்குக் காட்டிக்கொடுத்தனர். திரிதோஷ சிகித்சையைப்போல கிருமி சிகித்சையையும் அவசியமான இடத்தில் அவர்கள்விவரித்தும் இருக்கின்றனர். "ரக்தவாஹி ஸிரா ஸம்ஸ்தா: ரக்தஜா ஜந்தவோ ணவ: | அபாதா விருத்த தாம்ராச்ச ஸௌக்ஷ்ம்யாத் கேசித் அதர்சநா: || ஷட்தே குஷ்டைக கர்மாண:" ரக்தநாடிகளில் ரக்தத்திலுண்டாகும் சில கிருமிகள் அணுக்களாகவும், பாதமில்லாதவைகளாகவும், வட்டமாகவும், சிவந்த நிறமுள்ளவைகளாகவும், சிறிய உருவத்துடன் இருப்பதால் கண்களுக்குப் புலப்படாதவைகளாகவும் இருக்கின்றன. இவற்றுள் ஆறுவகை கிருமிகள் குஷ்டநோயை யுண்டுபண்ணுகின்றன. என்பது இவ்வசனத்தின் பொருள். சர்மரோகங்கள் 18 விதங்களாகப்

பிரிக்கப்பட்டிருக்கின்றன. சர்மரோகங்களனைத்தும் திரிதோஷங்களால் காணுபவையே. அதிகரித்த தோஷத்தைக்கொண்டு பேதங்கள் சொல்லப்படுகின்றன. அனுபவத்தில் இவ்வியாதிகளில் இன்னும் பல பேதங்கள் காணப்படுகின்றன. அவைகளை விவரிக்கின் பெருகுமென நினைத்து நிறுத்துகிறேன். ஆகாரம், பானம், முதலியவைகளின் தோஷத்தாலும் நடையுடை பாவனைகளின் பேதத்தாலும் அனுசாரத்தாலும் இந்நோய் காணுகின்றது. இக்காரணங்களால் திரிதோஷங்கள் பிரகோபத்தையடைந்து ரஸரக்தாதிகளை தூஷித்து சர்மவைவர்ண்யம் உண்டாக்கி சரீரத்தை மிகவும் ஆபாஸமாகச்செய்கின்றது. 18 குஷ்டங்களுள் கபோலம், உதும்பரம், மண்டலம், ரிக்ஷஜிஹ்வம், புண்டரீகம், தத்ருகாகணம் என்ற ஏழுவகைகளும் மகாகுஷ்டங்களெனப்படும். சர்மகிடிபம், விபாதிகா, அலஸம்லிதம: சர்மதலம், பாமா, விஸ்போடம், ஏக குஷ்டம், சதாருஷ் விசர்சிகா, என்ற 11-ம் க்ஷுத்ரகுஷ்டங்களெனப்படும். இது அஷ்டாங்கஹிருதயத்தை யொட்டி சொல்லப்பட்டது. மற்ற நூல்களில் சற்றுபேதம் காணப்படுகிறது. விரிவுபற்றி அவைகளைச் சொல்லவில்லை. இவற்றின் சிகிச்சைகளைச் சுருக்கமாகச் சொல்லுகிறோம். நோயாளி முதலில் காற்று, வெய்யில் நன்றாயுள்ள இடத்தில் வசித்தலும் சுத்தமாக இருத்தலும் அவசியம். கருங்காலிக் கட்டையால் தயாரித்த ஆசனம், படுக்கை, மிதியடி, இவை முதலியவைகளை உபயோகிக்கவேண்டும். இது தொத்துநோய் ஆனதால் நோயாளியைக் கூடியமட்டில் தனித்துவைக்கவேண்டும். தவிர ஔஷத சேவையுடன் சில பரிஹாரங்களும் வைதிகமுறையை யொட்டி செய்தல் அவசியம். இவ்விதம் அனுஷ்டித்து மயூரகவி என்பவர் இந்நோயிலிருந்து விடுபட்டாரென கேழ்விப்படுகிறோம். தவிர மலையாளத்தில் இந்நோய் வாய்பட்ட பலர் இம்முறையால் அனுகூலமடைந்திருப்பதைப் பிரத்யக்ஷத்தில் காணுகிறோம். மகாதிக்தகம், குக்குலுதிக்தகம் முதலிய கிருதங்களால் ஸ்நேஹபானம் செய்துவைத்து பக்ஷத்திற்கு பக்ஷம் வமனங்களும் மாதாமாதம் விரேசனங்களும் செய்துவைக்கவேண்டும். நீரடிமுத்து தோலா 400 இடித்து ஜலம் சின்னப்படி 32 விட்டு எட்டில் ஒன்றாக வற்றவைத்துக் கஷாயம்செய்து வடிகட்டி நெய் சின்னப்படி இரண்டுசேர்த்து நீர் அடிமுத்து மரத்தின் வேரை 48 தோலா இடித்துப்பொடி செய்து கல்கமாகப்போட்டு கிருதபதமாகக் காய்ச்சி உபயோகிக்க

குஷ்டநோய்கள் தீரும். மேகநோய் முடிவில் குஷ்டநோயாக ஆகும். அதிலும் இம்மருந்து விசேஷ நன்மைசெய்யும். இதோடு பிரங்காரிஷ்டம் என்கிற என் குருமுறைப்படி தயாரித்த அரிஷ்டத்தையும் உபயோகிக்க மிகவும் குணம் தரும். மதுஸ்நுஹீரஸாயனமும் மிகவும் நல்லது. பேயத்தி, வாய்விளங்கம், கார்போகவரிசி, இவைகளின் கஷாயமும் நல்லது. கார்போகவரிசி தைலத்தை உடம்பிற்கும், அஸநபில்வாதி தைலத்தைத் தலைக்கும் தேய்த்து ஸ்நாநம்செய்வது நல்லது. கார்போகவரிசி சூர்ணத்தை உடம்பிற்குத் தேய்த்துக் கொள்வது நல்லது. மணத்தக்காளி ரஸம், கரிப்பான் ரஸம் இவைகளில் பலதடவை பாவனைசெய்த கந்தகத்தை வெய்யிலுலர்த்திப் பொடிசெய்து அதற்குச் சமம் ரஸம்சேர்த்து மர்தித்து கார்போகவரிசி சூர்ணம் அனுபானத்தில் சாப்பிட குஷ்டநோய்கள் அனைத்தும் விலகும். இந்நோயை விலக்க மற்றொரு முக்கியமான உபாயம் பெரியோர்களால் சொல்லப்படுகின்றது. அதாவது—மலைப்பாம்பின் மாமிச தைலம் அதாவது மாமிசத்திலிருந்து எடுக்கப்படும் தைலம் குஷ்டநோய்களுக்கு நல்லது என்பதே. இவ்விஷயத்தில் பழைய கதை ஒன்று ஞாபகத்திற்கு வருகின்றது. ஓர் குஷ்டரோகி தன் நோய் தாங்காமல் ஓர் மலையாள வைத்தியரை யணுகி பரிஹாரம் கேழ்க்க அவர் மலைப்பாம்பின் மாமிச எண்ணெயை உபயோகித்தால் இந்நோய் விலகுமென உபதேசிக்க, அதில் அருவருப்புகொண்ட நோயாளியாரும் பாராவண்ணம் ஓர் மலை குகையை யணுகி அவ்விடத்தில் உப்பின்றி ஆகாரம்செய்துகொண்டு அவ்விடத்தில் ஓடிவரும் ஓர் அருவியில் நீராடிக்கொண்டு காலம்கழிக்க சிலநாள்சென்றவுடன் அந்நோயாளியின் நோய் பூர்ணமாகக் குணமாகி சரீரம் சுந்தர புருஷனாக விளங்க பிறகு அந்நோயாளி அருவருப்பான மருந்தைச் சொல்லிய வைத்தியரை யணுகிதன் வரலாற்றைச் சொல்ல அதை கேட்ட அவ்வைத்தியரும் ஆச்சரியமுற்று நோயாளி ஸ்நாநம்செய்து வந்த அருவியைச்சோதித்துப்பார்க்க அவ்வருவியின் தலைவில் ஓர் பெரிய மலைப்பாம்பு செத்து தோலும் எலும்புமாக இருப்பதையும் அதன்மேல் பாய்ந்து அருவியின் ஜலம் ஓடிவருவதையும் கண்டு நோய் விலகியதற்குப் பாம்புதான் காரணமெனக் கண்டார்கள் என்றும் அவ்வைத்தியர் மலையாளம் அஷ்ட வைத்தியர்களின் ஒருவர் எனவும் ஓர் பழைய கதையுண்டு.

## தந்தரோகசிகித்சை.

சீததந்தத்தை வேதுபிடித்து அடிபாகத்தைத் தேய்த்து ஒத்தடம் கொடுக்கவும். பிறகு எண்ணை தேய்த்து கோரைக்கிழங்கு மாதளம்பழ ஓடு மாக்ஷிகம் இந்துப்பு நாகக்கொட்டை திரிபலை சுக்கு இவை பொடிசெய்து தேன்சேர்த்து வாயில் அடைத்துவைத்துக்கொள்ளவும். நால்பால் மரக்கஷாயத்தால் நஸ்யம் செய்யவும். தந்தஹர்ஷம், தந்தபேதம் இவைக்கு வாதஹரமான சிகித்சை எல்லாம் குணமானது. அதிமதுரம் எள்ளு இவை போட்டு வேகவைத்தபாலை வாயில் அடக்கிவைத்துக்கொண்டால் இவை இரண்டும் குணப்படும். தந்தசாலத்திற்கு தசமூலகஷாயம் எண்ணைசேர்த்து வாயில் அடக்கிவைத்துக்கொள்ளவும். பாச்சோற்றி(லோத்திர பட்டை,) திப்பிலி, முத்தம், பத்தங்கம், திரிபலை, இவைதேனில் குழைத்துத்தேய்க்கவும். ஸ்நிக்தங்களான நஸ்யம் கண்டூஷம் செய்யவும். அதி தந்தத்தை உரைத்து காரம்தேய்த்து அற்றுப்போனால் கிருமிதந்தத்தைப்போல் பிடுங்கிவிட்டு சிகித்சைசெய்யவேண்டும். ரக்தம் வருவது நிற்காவிடில் ஒற்றடம் கொடுத்து விரணசிகித்சைகள் செய்யவும். சர்க்கராதந்தத்திற்குப்பல் அடியை முறிக்காமல் ஊத்தையைமாத்திரம் நீக்கி க்ஷாரசூர்ணத்தைத் தேன் கலந்து தேய்க்கவும். கபாலிகைக்கு இவை எல்லாம் செய்தபிறகு தந்தஹர்ஷத்தைப்போல் சிகித்சை செய்யவும். கிருமி தந்தத்திற்கு சமன சிகித்சை செய்யவும். ஸ்ராவம் செய்வித்து வேதுபிடித்து ஸ்நேஹௌஷதங்களைத் தேய்க்கவும். நஸ்யம், கண்டூஷம், பானம், இவை செய்யவும் ஸுஷிரத்தை ஸ்ராவிக்கச்செய்து ஒற்றடம் கொடுத்து எருக்கம்பால், ஏழிலைப்பால், இவைகளை நிரப்பவும். கிருமிசூலைக்கு இது மிக நல்லது. காயம், விடங்கம், பூஷணிவேர், ஸர்ஜிக்ஷாரம் இவை பொடிசெய்து கிழிகட்டி பல்லில் ஒத்தடம் கொடுக்கவும். இவைகளால் காய்ச்சின எண்ணையை வாயில் வைத்துக்கொள்ளவும். சிறுவழுதிலை, கண்டங்கத்திரி, சுண்டை, ஆமணக்கு, இவை வேரைக்கஷாயம் வைத்து இதனால் கண்டூஷம் செய்யவும். இவை செய்து குணம் ஏற்படாவிடில் பல்லை அடியோடு பிடுங்கிக்காய்ச்சிப் பிறகு சிகித்சை செய்யவும். அதிமதுரப்பொடியும் எண்ணையும் சேர்த்து கண்டூஷம் செய்யவும். தேனும் அதிமதுரப்பொடியும் சேர்த்தும் செய்யவும்.

விதாரியஷ்டியாஹ்வாதி தைலத்தால் நஸ்யம் செய்தால் கிரமமாக கிருமிதந்தம் தீரும். விதாரியஷ்டியாஹ்வாதி தைலத்தாலும், விதாரி அதிமதுரம், சிறுங்காடம், கசேரு, இவை கல்கம்சேர்த்து, தைலம் பால் பத்துமடங்கு இவை சேர்த்துக் காய்ச்சினதைலத்தாலும் நஸ்யம் முதலியன செய்யவும். மேல்பல்லைப் பிடுங்கக்கூடாது. பிடுங்கினுல் பல ஸங்கடம் உண்டாகும். கிருசன், துர்பலன், விருத்தன், வாத ரோகி: இந்த நான்குபேர்களுக்கும் ஒரு பல்லையும் பிடுங்கக்கூடாது.

## தந்தரோகசிகித்ஸை முற்றிற்று.

### முகரோக சிகித்சை.

எகிர் வியாதிகளில் சீதாதியில் கெட்ட ரக்தத்தைக்களைந்து, கோரைக்கிழங்கு, மருதம்பட்டை, மாக்ஷிகம், திரிபலை, ஞாழல்பூ, சுக்கு, இவை பொடிசெய்து தேனில் குழைத்துத் தேய்த்து இதன் கஷாயத்தில் தேன் கலந்து வாயில் நிறப்பிவைத்துக்கொள்ளவும். தேன் சேர்க்காமலும் செய்யலாம். மதுரஸ்கந்த ஸித்தமான தைலத்தால் நஸ்யம் செய்யவும். பித்தோபகுசத்தை வென்னீர் ஒற்றடம் கொடுத்து வேதுபிடித்து மண்டலாக்கிரத்தால்தேய்க்கவும். பிராய்தழையாலும் (இது உப்பு கடிதம்போல் பறபறவென இருக்கும்) தேய்க்கவும். அரக்கு, இந்துப்பு, ஞாழல்பூ, பத்தங்கம், அதிமதுரம், காவிக்கல், கோஷ்டம், மிளகு, சுக்கு, ரஸாஞ்சனம், இவை பொடிசெய்து நெய்சேர்த்துத் தடவவும். பிறகு சூடான தைலத்தையாவது தேன்நெய்யையாவது வாயில் நிறப்பிவைத்துக்கொள்ளவும். மதுரமாயும் ஸ்நிக்தமாயும் உள்ள கிருதத்தால் கபளம் நஸ்யம் இவை செய்யவும். தந்தபுடத்தை வேதுபிடித்து சேதனமோ, பேதனமோ செய்து புண் ஏற்பட்டால் அவ்விடத்தில் அதிமதுரம், சுக்கு, இந்துப்பு, யவக்ஷாரம், இவை சம இடை எடுத்துப்பொடித்து எகிரில் பிரட்டவும். தந்தவித்ரதி ஏற்பட்டால் காரமாயும் உஷ்ணமாயும் உள்ள மருந்துகளால் கபளம் (வாயில் நிறப்பிவைத்துக்கொள்ளுதல்) செய்யவும். இந்த மருந்துகளையே தேய்க்கவும். புழு உண்டானுல் கீறிவிட்டு ரக்தத்தைக்களைந்து காய்ச்சி பிறகு வைத்யம் செய்யவும். சுஷிரத்தை அறுத்துத்தேய்த்துத் தேன் பிரட்டவும். லோத்ர முஸ்தாதி தைலத்தை வாயில் நிறப்பிவைத்துக்கொள்ளவும். யஷ்டி

லோத்ராதிநஸ்யம் செய்யவும். அதிமாம்ஸத்தை அறுத்துத்தேனில் பொடியைக் குழைத்துத் தேய்க்கவும்- வசாதேஜோ வதீத்யாதி தைலத்தால் கபளம் செய்யவும். விதர்ப்பத்திற்கு முதலில் பல்லின் அடியில் சேர்ந்த தோஷத்தை மண்டலாக்ரத்தால் விலக்கி க்ஷார சூர்ணம் பிரயோகிக்கவும். பிறகு சீதத்ரவ்யத்தால் கபளம், நஸ்யம், முதலியன செய்யவும். தந்தத்தைப்பிடுங்கிக் காய்ச்சி வைத்யம் செய்யவும். பிறகு ஐந்து கதிகளுக்கும். மலங்காரை, நெரிஞ்சில், ஜாதி, கருங்காலி, இவை நாலும் வெல்லம் கலந்து தேய்க்கவும். பிறகு நால்பால் மரக்கஷாயத்தால் கபளம் செய்யவும். நால்பால் மரக்கஷாயத்தால் செய்த நெய்யால் நஸ்யமும் செய்யவும். வாத பிரதானமாக இருந்தால் வாதஓஷ்ட கோபத்திற்குச்சொல்லியமாதிரியும் செய்யவும்.

669. லோத்திரமுஸ்தாதி:—லோத்திரப்பட்டை, கோரைக் கிழங்கு, சதகுப்பை, திரிபலை, மாக்ஷிகம், பதங்கம், முள்முருங்கை பட்டை, கட்பலம், இவை கஷாயத்தால் கண்டூஷம் செய்யவும்.

670. யஷ்டிலோத்ராதி:—அதிமதுரம், லோத்திரப்பட்டை, உத்பலம், அருகம்பில், நன்னாரி, அகில், சந்தனம், காவிக்கல், ஜீனி, கரும்பு, இவைகளால் செய்யப்பட்ட தைலத்தால் நஸ்யம் செய்யவும்.

671. வசாதேஜோவதீ ஆதி:—வசம்பு, சிறுபுன்னையரிசி, (வாலுளுவையரிசி) பாடக்கிழங்கு, ஸர்ஜிக்ஷாரம், யவக்ஷாரம் பேய்ப் புடல், வேப்பம்பட்டை, திரிபலை, இவைகளால் கஷாயம்செய்து கபளம் செய்யவும்.

## ஜிஹ்வாரோக சிகித்சை.

வாததூஷிதைக்கு வாதோஷ்ட கோபத்தில் சொல்லியமாதிரி சிகித்ஸைசெய்யவும். பித்த தூஷிதையை உரைத்து ரக்தம் களைந்து மதுர ஔஷதங்களால் தேய்த்து நஸ்யம், கபளம், முதலியன செய்யவும். சிலேஷ்ம தூஷிதைக்கு கடுகு, திரிகடு, முதலிய ரூக்ஷத்திரவியங்களால் நஸ்யம் முதலியன செய்யவும். அலஸத்திற்கும் இவ்விதமே சிகித்சை செய்யவும். இதில் முறிப்பது உரைப்பது முதலியன செய்யக்கூடாது. அதி ஜிஹ்வைக்கு நாக்கைத் தூக்கிப்பிடித்து

இடுக்கியால் அதிஜிஹ்வையை எடுத்து மண்டலாக்ரத்தால் முறித்து அவ்விடத்தை சுத்தம்செய்து ரக்தம் நீக்கி உஷ்ண திரவியங்களால் தேய்க்கவும். உபஜிஹ்வையை ஸ்ரவிக்கச்செய்து சவுக்காரத்தால் தேய்க்கவும்.

தாலுரோக சிகித்சை.

மேல் அண்ணுக்கிற்குத்தாலு எனப்பெயர். அவ்விடத்தில் பிடகை முதலியன கண்டால் சிகித்ஸை மிகவும் ஜாக்கிரதையாகச் செய்யவேண்டும். நஸ்யம் கண்டுஷம் லேபம் முதலியனசெய்யவேண்டும். கள சுண்டியில் உடன் கபஹ்ர ஔஷதங்களால் உரைப்பது, நஸ்யம் செய்வது, கபளம்செய்வது ஆகிய இவை நல்லது. வெள்ளரி விதைபோல் தொங்கினுல் அது நாடியில் படாமல் இருந்தால் இடுக்கியால் எடுத்து மண்டலாக்ரத்தால் அதிக நுணியிலும் அதிக அடியிலும் இல்லாமல் முறிக்கவும். முறித்தது அதிகமானுல் ரக்தம் பெருகி மரணம் ஏற்படும். குறைவாக முறித்தால் வியாதி சீக்கிரம் விருத்தி அடையும் மிளகு பாடா அதிவிடயம், கோஷ்டம், வசம்பு, குடங்கட்ம், இந்துப்பு, இவை பொடிசெய்து தேன்சேர்த்து அறுத்த இடத்தில் தேய்க்கவும். பிறகு வேப்பம்பட்டை, வட்டத்திருப்பி, வசம்பு, கடுகுரோகணி, அரத்தை, அதிவிடயம், வெட்டிவேர், இவை கஷாயத்தால் கபளம் (வாயில் நிறப்பி) வைத்துக்கொள்ளவும். தாலு ஸம்ஹதி, கச்சபம், புப்புடம், மூன்றுக்கும் சிகித்ஸை இவ்விதம் தான், ஆனுல் உரைத்தால் போதும். முறிக்கக்கூடாது. அபக்வமான தாலுபாகத்தை அன்னபேதி, மாக்ஷிகம், தேன் கலந்து தேய்க்கவும். மதுர ஔஷதங்களால் செய்யப்பட்ட கஷாயத்கால் சீத கபளம் செய்யவும். பிறகு தீக்ஷ்ண மருந்துகளால் தேய்க்கவும். ஆடாதோர்டை, வேப்பம்பட்டை பேய்புடல் முதலிய கசப்பு சாமான்களால் செய்த கஷாயத்தால் கபளம் செய்யவும். தாலுசோஷத்தில் சுக்கு, திப்பிலி இவைகளால் தயார்செய்யப்பட்ட நெய்யைச்சாப்பிடவும். நெய்பால் முதலியதால் நஸ்யம் செய்யவும்.

தொண்டைநோய்களின் சிகித்சை.

இவைகளுக்கு வைத்தியம் செய்யும்பொழுது முதலில் ரக்தத்தைப்போக்கிப்பிறகு தீக்ஷ்ண திரவியங்களால் நஸ்யம் முதலியன செய்யவும். வேப்பம்பட்டை மாமஞ்சள், வெப்பாலையரிசி,

மாக்ஷிகம், இவைகளின் கஷாயத்தில், அல்லது கடுக்காய் கஷாயத்தில் தேன் சேர்த்துச் சாப்பிடவும். சிரேஷ்டா வியோஷாதியாவது குடிக்கவும் தினசரி கபளமும் தேய்ப்பதும் செய்யவேண்டும். நிசு ளம்கட பீத்யாதியால் வீக்கத்திற்குத் தேய்க்கவும். வாதரோஹ ணிக்கு கழுத்தின் உள் வெளி இருபக்கத்திலும் வேதுபிடித்து அங் குளிசஸ்திரத்தால் உரைக்கவும். பஞ்சமூல கஷாயத்தால் கபளம் செய்விக்கவும். ஷெடி கஷாயத்தால் செய்த எண்ணெயால் கண்டூஷம், நஸ்யம் செய்யவும். பித்தரோஹணியை நன்றாக உரைத்து ரக்தம் களைந்து ஜீனி, லோத்திரப்பட்டை, ஞாழல்பூ, இவை பொடிசெய்து தேனில் தேய்க்கவும். பிறகு லோத்திரப்பட்டை, பத்தங்கம், இவை கஷாயத்தால் கபளம் செய்விக்கவும். பேரீச்சை, திராக்ஷை, இவை கஷாயத்தாலும் கபளம் செய்விக்கவும். ரக்தரோஹணியிலும் இவைகளையே செய்யவும். சிலேஷ்மரோஹணி, சாலூரகம், விருந்தம், துண்டிகேரீ கிலாயு இந்த ஐந்திற்கும் ஒட்டரை, கடுதிரவியங்கள், கலந்து பிரட்டவும். பிறகு பெருநாயுருவிவிதை, நாகதந்திவிதை, வாய்விளங்கம், இந்துப்பு, இவை சேர்த்துக்காய்ச்சின எண்ணெயால் கபளம் செய்விக்கவும். நஸ்யமும் செய்யவும். வித்ரதியை ஸ்ரவிக் கச்செய்து கோரோசனை, திரிபலை, இந்துப்பு, காவிக்கல், லோத்திரப் பட்டை, மாக்ஷிகம், திப்பிலி, பத்தங்கம், இவை பிசைந்து கபளமும் செய்து தேய்க்கவும். களகண்டத்தை வேதுபிடித்து உரைத்து ரக்தம் களைந்து பிரியாளம், அகஸ்தி, சணம், இவைகளின் விதையை ஜலத்தில் அரைத்துக் கட்டவும், புண் அதிகம் ஆனால் சிக்ரு வில் வாதியால் தேய்க்கவும். குளுசிநிம்பாதி எண்ணெ சாப்பிடவும். சிலேஷ்மகண்டத்தை முந்தியதைவிட அதிகம் வேதுபிடித்து உரை த்து அமுக்கிராக்கிழங்கு, அதிவிடயம், பாலைக்கொடி, இவை அரை த்துத்தேனில் குழைத்து நன்றாகத்தேய்க்கவும். வத்ஸகாதி கணத் துடன் பஞ்சலவணம் கலந்து எண்ணெகாய்ச்சிச் சாப்பிடவும். பிறகு கபஹரங்களான ஔஷதங்களால் புகைபிடித்து நஸ்யம், வமனம், முதலியன நித்யமாகச் செய்விக்கவும். மேதோகண்டத்தில் ஸிராவே தம்செய்து ரக்தம்களைந்து அலனுதிகண கஷாயத்தை கோமூத்திரம் கலந்து சாப்பிடவும். இதில் சவுகரியமாகாவிட்டால் கீறிவிட்டு விரணசிகித்ஸை செய்யவும்.

672. சிரேஷ்டா வியோஷாதி— திரிபலை, திரிகடு, யவக்ஷாரம் மரமஞ்சள், கண்டங்கத்திரி, ரஸாஞ்சனம், பாடா, சிறுபுன்னையரிசி, எலுமிச்சை இவைகளைக்காடி கோமூத்திரம், இவைகளால் சித்தப் படுத்தி கபளமும், குளிகை முதலியனவும் பிரதிஸாரணத்திற்கு நல்லது.

673. நிசுளம்கடபீத்யாதி–சமுத்திராப்பழம், கடபீ,கோரைக் கிழங்கு, தேவதாரு, சுக்கு, வசம்பு, நாகதந்திவேர், மருள் இவைகளை அரைத்து இளஞ்சூடாக லேபனம் செய்தால் வலி, வீக்கம் முதலி யன சமிக்கும்.

674. சிக்ருபில்வாதி–முருங்கைப்பட்டை, லோத்திப்பட்டை, தழுதாழை, யானைத்திப்பிலி, வெள்ளைச்சாரணத்தி, காலாகரு, சீந் திற்கொடி, எருக்கம்வேர், அலரிப்புஷ்பம், சிவதைவேர், இவைகளைச் சமயிடையாக எடுத்து கள் அல்லது காடிவிட்டு அரைத்து லேபம் செய்யவும்.

675. குடூச்யாதி—சீந்திற்கொடி, வேப்பம்பட்டை, வெப் பாலைப்பட்டை, சிறுபுள்ளடி, சித்தாமுட்டி, பேராமுட்டி, திப்பிலி, தேவதாரு, இவைகளால் தயார்செய்யப்பட்ட தைலத்தை உள்ளுக்கு உபயோகிக்கவும்.

676. வத்ஸகாதி—வெப்பாலை, மருள், சிறுதேக்கு, கடுகு ரோகிணி, மிளகு, அதிவிடயம், சதுரக்கள்ளி, ஏலம், பாடக்கிழங்கு, ஜீரகம், பெருவாகைக்காய் (பலகப்பிரியாணி), ஓமம், வெள்ளைக் கடுகு, வசம்பு, காட்டுஜீரகம், பெருங்காயம், வாய்விளங்கம், தை வேளை, பஞ்சகோலம் இவைகளின் கஷாயம் முதலியவை முகரோகங் களுக்கு நல்லது.

677. அஸநாதி—வேங்கை, தினிசம், பூர்ஜமரம், மருதம்பட் டை, முள்முருங்கை, கருங்காலிக்கட்டை, வெள்ளைக் கருங்காலிப்பட் டை, வாகைப்பட்டை, சிம்சுபாவிருக்ஷப்பட்டை, (தோதகத்தி எனச் சிலர்) வேலிப்பருத்தி, வெள்ளைச்சந்தனம், சிகப்புச்சந்தனம், மரமஞ் சள், பனை, புரசம்பட்டை, அகில், சாகமரம். சாம்பிராணிமரம்,

பாக்குமரம், தவவிருக்ஷம், வெப்பாலையரிசி, சாககர்ணம், அலரி, இவைகளின் கஷாயம் முகரோகங்களுக்கு நல்லது.

## உள்வாய் ரோகங்களின் சிகித்சை.

முகபாகங்கள் எல்லாவற்றிலும் முகசோதனம் செய்யவும். ஜாதித்தளிர், திராக்ஷை, திரிபலை, வட்டத்திருப்பி, இவை கஷாயம் வைத்து தேன்கலந்து கபளம் செய்யவும். இந்த மருந்துகளையே வாயில்போட்டு மென்று உமியவும். குடோராதி கணத்தாலும் இவ்விதம் செய்யலாம். வாத முகபாகத்திற்கு இந்துப்பு, திப்பிலி, ஏலரிசி, இவை தேன்கலந்து தடவவும். வாதஹர தைலங்களால் தயார்செய்யப்பட்ட தைலத்தால் கபளம் நஸ்யம் செய்யவும். பித்தரக்தத்தால் வருவதற்கு பித்தரக்தஹர சிகித்ஸையும் கபத்தால் வருபவைகளுக்கு கபஹர சிகித்ஸையும் செய்யவும். மிகவும் கெட்டியாயும் கனமாயும் உள்ள கட்டிகள் ஏற்பட்டால் அவற்றை உடைத்து விரணசிகித்சை செய்யவும். தோஷத்திற்குத் தகுந்தபடி பார்த்துச் செய்யவும். புதிதாக வளர்ந்த அர்ப்புதத்தை முறித்து சுக்கு, ஸர்ஜி க்ஷாரம், தேன் கலந்து தேய்க்கவும். சீந்தில், வேம்பு இவைகளுடன் எண்ணையும் தேனும் சேர்த்து கபளம் செய்யவும். பிறகு தீக்ஷ்ணதைலத்தால் அப்யங்கம் நஸ்யம், யவான்னபோஜனம், இவை செய்யவும். பூதிவக்த்ரத்தில் வமனம்செய்து வைத்து தீக்ஷ்ண தூபம், நஸ்யம், செய்விக்கவும். ஸமங்காதியால் கபளம் செய்யவும். பீநஸாபகுசத்தில் சொல்லிய நஸ்யம் சேவிக்கவும்.

678. ஸமங்காதி—மஞ்சிஷ்டி, காட்டாத்திப்பூ, லோத்திப்பட்டை, ஞாழல்பூ, பத்மகாஷ்டம் இவைகளின் கஷாயம் அல்லது சூர்ணத்தை உபயோகிக்க முகரோகங்கள் தீரும்.

679. திரிபலாதி- திரிபலை, கண்டங்கத்திரி, நிலவேம்பு, அதிமதுரம், வெள்ளைக்கடுகு, திரிகடு, கோரைக்கிழங்கு, மஞ்சள், மரமஞ்சள், யவக்ஷாரம், விருக்ஷாம்லம், புளி வஞ்சி, அரசம்பட்டை, நாவல்பட்டை மாமரத்தின்பட்டை, மருதம்பட்டை, அலரிப்பட்டை, கருங்காலி வைரம், இவைகளைக் கஷாயம்செய்து வடிகட்டி அக்கஷாயத்தை அடுப்பேற்றி வற்றவைத்துக் குழம்பாக ஆகும் சமயத்தில் ஷை கிர

வியங்களைச் சமயிடையாகப்பொடிசெய்து அந்தப்பொடியையும் அக்கஷாயத்தில் போட்டுக்கிளரி குளிகைசெய்து வாயில் அடக்கிக்கொள்ள தொண்டை, உதடு, நோய்கள், ரோகணி, முதலிய பல ரோகங்கள் தீரும். இது விதேகதேச அரசனால் சொல்லப்பட்டது.

680. க்ஷுத்ராதி—கண்டங்கத்திரி, சீந்தில், ஜாதித்துளிர், மரமஞ்சள், செங்கொட்டி, திரிபலை, இவைகளைச் சமயிடையாக எடுத்துக்கஷாயம்செய்து அதில் தேன் சேர்த்து கபளம் செய்ய முகரோகங்கள் அனைத்தும் தீரும்.

681. பீதகசூர்ணம்—மரமஞ்சள் தோலி, இந்துப்பு, மனோசிலை, தாளகம், யவக்ஷாரம், இவைகளைச் சமயிடையாக எடுத்துப்பொடி செய்து தேன், நெய், சேர்த்து குளிகைசெய்து வாயில் அடக்கிக்கொள்ள தந்தரோகங்கள், முகரோகங்கள், அனைத்தும் தீரும். குறிப்பு— மருந்தை வாயில் அடக்கிக்கொண்டு உமிழ்நீரை வெளியில் துப்பிவிடவேண்டும். பிறகு வென்னீரால் வாயைக்கொப்பளித்துவிடவும்.

682. பத்யாயோகம்—கோமூத்திரத்தில் கடுக்காயைப்போட்டு நன்றாக வேகவைத்துப் பதமானவுடன் அக்கடுக்காயை வெட்டிவேர், சதகுப்பை, கோஷ்டம், இவைகளின் கஷாயத்தால் பாவனை செய்து உலர்த்தி அக்கடுக்காயை உள்ளுக்குப் பிரதிதினமும் சாப்பிட்டு வரும் மனிதர்களை முகரோகங்கள் அணுகா. முகம், தொண்டை, ஏகிர், இவைகளில் வரும் ரோகங்கள் அநேகமாக கபரக்தங்களின் பிரகோபத்தால் உண்டாகின்றன. ஆகவே அந்நோய்களில் கெட்ட ரக்தத்தை ஸ்ராவிக்கச்செய்வது அவசியம். சிரோவிரேசனம், சரீர விரேசனம், வமநம், காரம், கசப்புரசமுள்ள திரவியங்களால் கபளம் கபரக்தஹராங்களான சிகித்ஸைகள் ஆகிய இவை மிகவும் உத்தமம்.

## முகரோக சிகித்ஸை முற்றிற்று.

### சிரோரோக சிகித்சை.

வாத சிரோரோகம் அதிகம் ஏற்படும்பொழுது வாதஹரமான சிகித்சைகள் செய்யவும். வாதத்திற்கு சொல்லியவற்றைத் தலையில்

தேய்த்துக்கொள்ளவும். இரவு நெய் சாப்பிடவும், உடன் சூடான பால்சாப்பிடவும், பாசிப்பயறு, கொள்ளு, உளுந்து இவைகளை நெய் கலந்து சாப்பிடவும். எள்ளை அரைத்து எண்ணை பால்கலந்து சாப் பிடவும். மாம்ஸம் தான்யம் இவைகளால் பிண்டோபநாஹ(கிளி) ஸ்வேதம் ஞவரக்கிழி முதலியன செய்யவும். வாதஹரங்கள் தச மூலம் இவைகளால் தயார்செய்யப்பட்ட பால்தாரையும் ஸ்நிக்தங் களான நஸ்யமும் தூபமும் ஹிதம். வருணாதிகணத்தில் பாதி ஜலம் சேர்த்துக்காய்ச்சின பாலைக்கடைந்து எடுத்த நெய்யை மதுரத்ரவ்யங் களால் தயார்செய்து அதால் நஸ்யம்செய்வது மிகவும் நல்லது. கார்பாசாதியும் நல்லது சூடு முதலியன விதிக்குக் கட்டுப்பட்டு செய் யவும். ரக்தமோக்ஷம் செய்யக்கூடாது வருணாதிகணம் கஷாயத்தில் பால்சேர்த்துக்காய்ச்சின நெய்யை ஜீனிகலந்து சாப்பிட தலைவலிகள் தீரும். இந்த சிகித்ஸைகள் எல்லாம் அர்தாவபேதத்திற்கும் செய்ய லாம். பித்தத்தால் உண்டான சிரஸ்தாபத்தில் ஸ்நிக்தனுகச் செய்து விராவ்யதம் செய்யவும், பிறகு தலையில் சீதங்களைத்தேய்த்து தாரையும் பஸ்தியும் தலைக்குச்செய்யவும். ஜீவனீயகணம் சேர்த்துத் தயார்செய்த பால் சாப்பிடவும். அந்த மருந்துகளால் தயாரான நெய்யால் நஸ்யம் செய்யவும். சங்கத்தைத்தவிர மற்றரக்தஜங்களில் இவ்விதம் செய்யவும். சிலேஷ்ம சிரோரோகங்களில் பழைய நெய் யைத்தேய்க்கவும். கடு திரவியங்களால் சமனம் வருத்தவும். தீக்ஷ்ண உஷ்ண ரூக்ஷ மருந்துகளால் ஸ்வேதம், பிரலேபம், நஸ்யம் செய்யவும் உபவாஸம் செய்வது விசேஷம். திரிதோஷ கோபத் தால் ஏற்படுவதற்குக்கலந்து சிகித்ஸைகள் செய்யவும். கிருமிஜதாபம் வரும் பொழுது ரக்தத்தால் நஸ்யம்செய்தால் கிருமிகள் ரக்தகந்தத் தால் மதத்தையடைந்து கிளம்பும். பிறகு வெளியில் வருவதற்கு காயம், நாகதந்தி, சர்ஜிக்ஷாரம், வாய்விளங்கம், இவைகளை கோமயத் தில் வேகவைத்து நஸ்யம் செய்யவும். பீலுகம், வேப்பு, கடுகு இவைகளில் ஒவ்வொன்றினுடைய எண்ணையால் நஸ்யம்செய்யவும். வாய்விளங்கத்தை ஆட்டு மூத்திரத்தில் வேகவைத்து நஸ்யம் செய் யவும். நஸ்யத்திற்கு ஏற்பட்ட மருந்துகளுடன் பூதி மத்ஸ்யமும் சேர்த்துப் புகைசெய்யவும் ரக்தமோக்ஷம் செய்யக்கூடாது. சிரக் கம்பத்திற்கு வாதாபிதாபத்தில் சொல்லியமாதிரி எல்லாம் செய்ய

வும். சூடுபோடக்கூடாது. பிறந்தகுழந்தைகளுக்கு ஏற்படும் உபசிரஸ்ஸிற்கு வித்ரதிக்கு போல் செய்யவும். பக்வமாவதற்கு முன் வாதத்திற்குப்போல்செய்யவேண்டியது. பழுக்தால் வித்ரதிபிடகம் அர்ப்புதம் இவைகளைப்போல செய்யவும். தோஷத்திற்குத்தகுந்த மாதிரி செய்யவும். அரும்ஷிகையில் ரக்தத்தை அட்டைவிட்டு குடிக்கச்செய்து எலுமிச்சம்பழரஸத்தால் கழுவி குதிரைலத்தியைப் பிழிந்த ரஸத்தில் இந்துப்பு கூட்டித்தேய்க்கவும். மஞ்சள் சேர்த்து அரைத்த பேய்புடல், அல்லது வேப்பிலையை, கோமூத்திரம் சேர்த்துத்தேய்க்கவும். கண்டு முதலியன தீரும். அரூம்ஷிகைக்கும் சாஸைக்கும் மாலதி, சித்ரமூலம், அலரி புங்கை இவைகளால் எண்ணை வடித்துத்தேய்க்கவும். அரக்கு கஷாயம் வைத்து வாசனைப் புல், நெல்லிக்காய் கொன்னையிலே, வெற்றிலே பாதரஸம்சமம் சேர்த்து அரைத்துக் காய்ச்சின தைலத்தைத் தேய்க்கவும். இதிலும் குணம் ஆகாவிடில் வமனம் முதலியன செய்துவைக்கவும். தாருணகத்திற்கு நெற்றியில் ரக்தம்போக்கி சுத்திசெய்து தூமம் நஸ்யம் வஸ்திசெய்து பிறகு உளுந்து, கடுகுகோஷ்டம், பிரியாளத்தின் விதை அதிமதுரம், இந்த ஐந்தும் தேன் சேர்த்துத்தேய்க்கவும். பிறகு க்ஷார ஜலத்தால் அலம்பவும். இந்திரலுப்தத்தில் ஸிராவேதம் செய்து ரக்தம்போக்கி சகஸ்ரபேதி கன்னாரம், கல்மதம், ஜீரகம், திப்பிலி, அதிமதுரம்' அமுக்கிராக்கிழங்கு சுக்கு, நெரிஞ்சில்முள், இவை சூர்ணம் செய்து பாலில் சாப்பிடவும்.

# சிரோரோக சிகித்ஸை முற்றிற்று.

## பலவகை.

குறிப்பு:—பலவகை என்ற இந்த அத்தியாயத்தில் பலவித நோய்களுக்குப் பலவித மருந்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த அத்தியாயத்தில் ஸஹஸ்ரயோகத்தில் இல்லாத சில யோகங்களும் (எழுத்துப்பிரதியிலுள்ள) சேர்க்கப்பட்டிருக்கின்றன.

683. மஹாமதுஸ்நுஹீரஸாயனம்—திரிகடு, திரிபலே, ஏலம், இலவங்கப்பட்டை, பச்சிலே, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, கொடுவேலி

வேர், கிராம்பு, மல்லிவிதை, சிறு ஜீரகம், பெருஞ்ஜீரகம், கருஞ்ஜீரகம், வாய்விளங்கம், செவ்வியம், கோஷ்டம், சிவதை, தேசாவரம், அமுக்கராவேர், சிறுதேக்கு, வாலுளுவையரிசி, சிறுநாகப்பூ, வகைக்குத்தோலா அரை, இவைகளை இடித்து வஸ்திரகாயம் செய்து சுத்தி செய்த கந்தகம், குக்கில், பரங்கிப்பட்டை, இவை வகைக்குத்தோலா 16, நெய் தோலா 48, ஜீனி தோலா 48, இவைகளைச்சேர்த்துக்கலபத்திரப்படுத்தி தினம் காலையில் அரைத்தோலா உபயோகிக்கசர்மதுர்நோய், சொரிசிரங்கு, பிரமேஹம், பவுந்தரம், மூலம், அர்புதம், கண்டமாலை, வாதரக்தம், அரிப்பு, மேஹநோய்கள், குஷ்டவிரணங்கள், முதலிய ரோகங்கள் சமிக்கும். பத்தியம்—புளி, நல்லெண்ணை, வகையறா நீக்கவும்.

குறிப்பு—கந்தகத்தைப் பொடிசெய்து கரிப்பான் ரசத்தில் 3 பாவனை செய்யவும். பிறகு வெய்யிலில் உலர்த்தி நன்றுகப்பொடித்து ஓர் இருப்புக்கரண்டியில் போட்டுத் தணலில் வைக்க உருகும். உருகினவுடன் தாமதிக்காமல் கரிப்பான் ரசத்தில் சாய்க்கவும். பிறகு எடுத்து வெய்யிலில் உலர்த்தி நன்றுகப்பொடிசெய்துகொள்ளவும். இது கந்தகசுத்தி. குக்கிலைகல் குச்சியில்லாமல் பொறுக்கி திரிபலை கஷாயத்தில் வேகவைத்து வெய்யிலில் உலர்த்திக்கொள்ளவும். இது குக்கில் சுத்தி. பரங்கிப்பட்டையை இடித்துப்பொடி செய்து சின்னப்படி ஒருபடி பசும்பாலை ஓர் மண்கலயத்தில் போட்டு கலயத்தின் வாய்க்கு ஓர் வெள்ளைத்துணி மூடிகட்டி அதின்மேல் சூர்ணத்தை வைத்து மேல்வாய்க்கு சட்டிமூடி அடுப்பேற்றி தீயிட்டு எரித்து எடுத்துக்கொள்ளவும். இதை புட்டவித்தல் என சாதாரண ஜனங்கள் சொல்லுவார்கள். அதாவது பசும்பாலின் ஆவியில்வெந்து போவது பரங்கிப்பட்டைக்குச் சுத்தியாகும். பிறகு வெய்யிலில் காயவைத்துப் பொடிசெய்துகொள்ளவும். இனி இந்த மதுஸ்நுஹீ ரஸாயனம் செய்முறை—கடைச்சரக்கு மொத்தம் 26 இதை நன்றுக இடித்து வஸ்திரகாயம் செய்துவைத்துக்கொள்ளவும். கந்தகம் நீங்கலாக மற்ற இரண்டு சாமான்களை அதாவது பரங்கிப்பட்டையையும், குக்கிலையும் நன்றுகப்பொடிசெய்து கொள்ளவும். குக்கிலை மாத்திரம் தனியாகக் கல்வத்தில் பொடிசெய்து கொள்ளவும். பிறகு

ஓர் இரும்பு பாத்திரத்தை அடுப்பேற்றி கொஞ்சம் ஜலம்விட்டு அதில் முதலில் குக்கிலைப்போட்டு தீயிட்டு அது நன்றாகஜலத்துடன் கரைந்துபோகும்படி செய்யவும். ஜலம் போதாவிட்டால் மறுபடியும் கொஞ்சம் ஜலம் விட்டுக்கொள்ளவும். நன்றாகக்கரைந்து சந்தனவிழுதுபோல வரும் சமயத்தில் ஜீனியைக்கலக்கவும். நன்றாக சட்டுவத்தால் கிளரிக்கொடுக்கவும். நெய்யையும்கந்தகப்பொடியையும் நீங்கலாக மற்றப்பொடிகளைப் போட்டு நன்றாகக்கிளரி கலக்கவும். பிறகு அடுப்பைவிட்டு இறக்கி நன்றாக ஆறினபிறகு கந்தகப்பொடியைத்தூவி நன்றாகக்கலக்கவும். சூட்டுடன் கந்தகப்பொடியைச் சேர்த்தால் சகிக்கமுடியாத நாற்றமடிக்கும். மருந்து சாப்பிடுவது கஷ்டமாகும். பிறகு தேனைவிட்டு நன்றாகக்கலந்து ஜாடியில்போட்டு மூடி தான்யபுடம் வைத்திருந்து பிறகு அளவுப்படி உபயோகிக்கவும். பத்தியம் கடுமையாக இருக்கவேண்டும்.

684. சுவாஸாநந்த குளிகை—லிங்கம் பணவிடை 45 எடுத்து முலைப்பாலில் அரைத்துக்கொள்ளவும். நாவிக்கிழங்கு பணவிடை 45 எடுத்து அடியில்கண்டவிதமாகச் சுத்திசெய்து எடுத்துக்கல்வத்திலிட்டு முன்சொன்ன லிங்கத்தையும் சேர்த்து ஜீரகக்கஷாயத்தால் மூன்றுஜாமம் அரைத்து அதில் பச்சைக்கர்ப்பூரம் பணவிடை 45 சேர்த்து முன்சொன்ன கஷாயத்தில் அரைத்து குன்றுமணிபோல் உருட்டி நிழலில் உலர்த்தி ஒரு குளிகையை முலைப்பாலில் கரைத்து கால்தோலா கல்கண்டு பொடியும் சேர்த்துச்சாப்பிடவும். ஜீரகக்கஷாயத்திலும் சாப்பிடலாம். காஸம், சுவாஸம், தீரும். ஸந்நிபாதத்தில் நன்மை செய்யவும். குறிப்பு—நாவிக்கிழங்கைப்பொடியாக நறுக்கி ஓர் மண்பாத்திரத்திலிட்டு நிறைய கோமூத்திரம்விட்டு வெய்யிலில் வைக்கவும். இவ்விதம் வெய்யிலில் மூன்றுநாள் வைக்கவும். பிரதிதினம் பழைய கோமூத்திரத்தைத் தள்ளிப்புதிய கோமூத்திரம் விட்டு வரவேண்டும். பிறகு சுத்த ஜலத்தில் கழுவி வெய்யிலில் உலர்த்திப்பொடிசெய்து கொள்ளவும்.

685. உதரஸோதக்குளிகை—லிங்கம், கடுக்காய், வெள்ளைக்காயம், இந்துப்பு, வெங்காரம், வசம்பு, யவக்ஷாரம், கழற்சிப்பருப்பு

# குறிப்பு.

ஸம்ஸ்கிருத நூல்களில் சொல்லியுள்ள அரிய பெரிய மருந்துகளைச்செய்து கியாதிபெற தென்னாட்டினருக்கு வசதி மிகவும் குறைவாக விருக்கின்றது. பல ஆயுர்வேத மூலிகைகள் வடநாட்டிலேயே கிடைக்கின்றன. நமது நாட்டில் பல மூலிகைகளுக்குப்பெயரே தெரியவில்லை. தெரிந்த சில மூலிகைகளும் கிடைப்பதில்லை. மலையாளத்தில் சில மூலிகைகள் கிடைத்தபோதிலும் பல மூலிகைகள் அங்கும் துர்லபமாக விருக்கின்றன. நாம் பல வருஷங்களாக வடநாட்டிலிருந்தே பல மூலிகைகளை வரவழைத்து உபயோகித்து வருகிறோம். எல்லா வைத்தியர்களுக்கும் அந்த மூலிகை முதலியவைகள் சுலபமாகக் கிடைக்கும்படி நாம் ஓர் மூலிகை ஸ்டோர் ஏற்படுத்தத் தீர்மானித்திருக்கின்றோம். தற்காலம் அமயிற்கண்ட சாக்குகள் நமது கைவசமிருக்கின்றன. (1) பிடாலவணம் (2) சௌவர்ச லவணம் (3) கட்பலம் (4) விருத்ததாரகம் (5) நாகபலா (6) அம்லவேதஸம் (7) பத்மகம் (8) சுவர்ணமாக்ஷிகம் (பஸ்மம் செய்யாதது) (9) வைக்ராந்தம் (பஸ்மம் செய்யாதது) (10) ராஜாவர்தம் (11) ரஸாஞ்ஜனம். இவை யனைத்தும் தென்னாட்டில் கிடைக்காத வஸ்துக்கள். வடநாட்டிலிருந்தே வரவழைக்கப்பட்டவைகள். காலக்கிரமத்தில் இன்னும் பல சாக்குகளையும் தயார்செய்ய உத்தேசித்திருக்கின்றோம். விலை விவரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

பண்டிட் S. நாராயண அய்யங்கார்,
நெ. 2, போலீஸ் ஸ்டேஷன் மேற்கு சந்து,
மதுரை.

Registered No. M. 4018.

# க்ஷயாந்தக ரஸம்.

க்ஷய நோய்களுக்கு (Pulmonary Tuberculosis) ஒப்பற்ற மருந்தெனச் சுதேச நூல்களில் கூறப்பட்ட தாளக … வைக்ராந்த பஸ்மம், ஸ்வர்ணமாக்ஷிக சிந்தூரம், ஆகிய இம்மூன்… அளவுப்படி சேர்க்கப்பட்டு க்ஷயாந்தக ரஸமென்ற பெயர்… வெகு காலமாக அநுபவத்தில் பரிசீலிக்கப்பட்ட இம்மருந்து … நோய்களில் மிகுந்த குணம் கொடுக்கக் கூடியது. சுமார் 15 … களுள் காய்ச்சல் முதலியவைகளைக் குறைத்துச் சில … களுக்குள் பூர்ண சுகத்தை அளிக்கின்றது. 4 அல்லது 5 … களுக்குள் க்ஷய நோய் பூர்ணமாக நிவர்த்தியாகும். இத்து… ஸ்வர்ண பஸ்மம் சேர்த்துச் சாப்பிடுவதும் நாகப்பல … அநுபானமாகக் கொள்வதும் மிகவும் நல்லது.

| | | |
|---|---|---|
| க்ஷயாந்தக ரஸம் | ஒரு மாத மருந்து விலை ரூ. | 1… |
| ஷை ஸ்வர்ண சிந்தூரத்துடன் | ஷை ஷை விலை ரூ. | 2… |
| [illegible]லேகியம் | ஷை ஷை விலை ரூ. | |

தபால் செலவு வேறு.

மருந்தைக் காலை 6-மணி, சாயங்காலம் 6-மணி ஆக இ… வேளைகளில் தேனில் குழைத்துச் சாப்பிட வேண்டும். … கோதுமை, பருப்பு, தயிர், பால், நெய், வெண்ணெய், பாதாம்ப… …ப் பருப்பு, ஆரஞ்சு, கொடிமுந்திரிப் பழம், ஜீர்ணமாகும் … காய்கறிகள் முதலியன புஷ்டியாகச் சேர்த்துக் கொள்ளலாம். காய்ச்சல் இருந்தாலும் ஸ்நானம் கூடாது. காய்ச்சல் நின்றபின் தைல ஸ்நானம் செய்யலாம்.

குறிப்பு:—மருந்தைப் பரீக்ஷை செய்ய விரும்பும் வைத்… களுக்கு மாத்திரம் க்ஷயாந்தக ரஸம் (ஸ்வர்ண சிந்தூரமில்லா…) பாதிவிலைக்குக் கொடுக்கப்படும்.

விலாசம்:—

**பண்டிட் நாராயண அய்யங்கார்,**
2, சிர் போலீஸ் ஸ்டேஷன் மேல்புரம் சந்து, மதுரை.